தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 64 மலர் 3

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2021

துணர் : 64 பிரமோதூத — ஆனி மலர் : 3

ஜூன் — ஜூலை — 1990

உள்ளுறை பக்கம்

1. கிளைமொழி, குறுமொழி, இனமொழி, பொது வரிவடிவம்—ஒரு பார்வை 98
டாக்டர். இரா. இராசகோபாலன்

2. கல்வெட்டுத் தமிழ் — சில தனித்தன்மைகள் 104
இரா. பாக்கியலட்சுமி

3. கவிஞர் கண்ணதாசனின் 'மாங்கனி' ஓர் ஆய்வுக் கட்டுரை 115
ப. முருகானந்தம்

4. சீன ப்ளம்-பிளாசம் ஊசிச் சிகிச்சை முறை 121
டாக்டர். ஐ. சிவசுப்பிரமணிய ஜெயசேகர், எம். பி. பி. எஸ்.,

5. ஆலய இசைக் கருவிகள் 125
செல்வி. இரா. மாதவி, பி.ஏ., (இசை) எம் ஏ ,

6. பழந்தமிழர் வழிபாடு 131
புலவர் க. மா. வீரணன், எம். ஏ., பி லிட்.,

7. திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு 142
(சென்ற இதழ் தொடர்ச்சி)
இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ., எம்ஃபில் ,

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை,
சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி எல்.,பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம் ஏ எம்.லிட், பிஎச்.டி
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, பி ஏ,
சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி,சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம் ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி

,, புலவர். செ. இராசு எம். ஏ,
இணைப்பேராசிரியர்,கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர்.த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர்,உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி

,, பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்., பிஎச். டி.,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

கிளைமொழி, கூறுமொழி, இனமொழி, பொது வரிவடிவம் — ஒரு பார்வை

டாக்டர். இரா. இராசகோபாலன்,
தமிழ்த்துறை,
மன்னர் சரபோசி அரசு கல்லூரி,
தஞ்சாவூர்.

எல்லோர்க்கும் விளங்கக் கூடிய மொழி நாட்டின் பொது மொழியாகும். இவ்வாறு வழங்கப்படும் மொழி சிற்சில காரணங்களால் திரிந்து வேறுபாடுடையதாயும் வழங்கி வருகின்றது. இவ்வித மொழியைக் கிளை மொழியெனக் கிளத்துவர்.

ஒரு மொழி பொது மொழியாக இருப்பினும் இடத்திற்கு இடம் மக்கள் பேசும் பேச்சு வேறுபட்டால், மொழி வேறுபட்டு அமைகிறது.

"தஞ்சாவூர்க்காரர் சென்னைக்குப் புதியவராக வந்தார். ஒரு கடைக்குப் போனார். ஒரு பொருளைக் காட்டி "இது என்ன விலை அய்யா?" என்றார். கடைக்காரனுக்குக் கோபம் வந்தது. "என்ன அப்பா சீமான் என்று நினைத்துக்கொண்டு பேசுகிறாயோ?" என்றான். தஞ்சாவூர்க்காரருக்கும் கோபம் வந்தது. கோபம் தணிந்து கடைக்காரன் அவரைப் பார்த்து "மனிதனுக்கு மனிதன் சமமாக எண்ணிப் பேசு அப்பா, அய்யாகிய்யா என்று இப்படிப் பேசுகிறாயே" என்றான். பக்கத்தில் இருந்த ஒருவர் குறுக்கிட்டு தஞ்சாவூர்க்காரரைப் பார்த்து "நீங்கள் வெளியூர்க்காரர்போல் தெரிகிறது. இங்கே அய்யா என்று கூப்பிட்டால் கோபம் வரும். அப்படிப் போசாதீர்கள்" என்றார். உடனே தஞ்சாவூர்க்காரர் இவரைப் பார்த்து "கடைக்காரர் அப்பா, கிப்பா, என்று என்னை அவமதிப்பாகப் பேசுகிறாரே" அது தகுமா? என்றார். அப்போது தான் ஒருவர்க்கொருவர் கொண்ட கோபத்தின் காரணம் விளங்கியது.

தஞ்சாவூர் தமிழ்நாட்டில் உள்ள நகரம். சென்னை தமிழ் நாட்டின் தலைநகரம். அப்படியிருந்தும் 'அய்யா' என்றால் சென்னைத் தமிழர்க்குக் கோபம் வருகிறது. 'அப்பா' என்றால் தஞ்சாவூர்த் தமிழர்க்குக்கோபம் வருகிறது என்று மு. வரதராசன், 'சொல்லின் கதை' என்ற நூலில் பக்கம்-39 இல் குறிப்பிடுவர்,

இவ்விதமாக இடத்திற்கு இடம் பேச்சில் வேறுபாடு இருப்பதைப் பரவலாகக் காணலாம். திருநெல்வேலியில் 'மேடை' மாடி வீட்டைக் குறிக்கும். பிற இடங்களில் பேச்சு மேடையைக் குறிக்கும். திருநெல்வேலியில் குவளை அல்லது வாளியால் குடிக்க நீர் கொண்டு வருமாறு கூறுவார்கள். வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் வாழும் தமிழர்களுக்கு குவளை, வாளி என்றால் தெரியாது. 'டம்ளர்' 'பக்கெட்' என்று ஆங்கிலச் சொற்களைச் சொன்னால்தான் தெரியும். சென்னையில் 'கொசுறு' என்றால் கூடுதலாகக் கொடுத்தலைக் குறிக்கும். இது பிற பகுதிகளில் இல்லை. தமிழ்நாட்டில் 'கொசு' எனக் கூறுவர். ஆனால் ஈழத்தில் 'நுளம்பு' என்ற சொல் வழங்குகிறது. தமிழகத்தில் புத்தகத்தின் மூடு ஏட்டை 'அட்டை' என்று வழங்க அதையே 'மட்டை' என்று ஈழத்தில் வழங்குவர். ஈழநாட்டில் 'வருத்தம்' என்ற சொல் நோய்வாய்ப்படுதலைக் குறிக்கும். பிற இடங்களில் துன்பத்தைக் குறிக்க வழங்கி வருகின்றது. செட்டி நாட்டில் 'பந்தல்' அமங்கல நிகழ்ச்சிக்குப் போடப்படும் பந்தலைக் குறிக்கிறது. மனப் பந்தலைக்குறிக்க அங்குக் 'காவணம்' என்ற சொல்லே வழங்குகின்றது. இவ்வாறு சுட்டுமாறு இடத்திற்கு இடம் பேச்சு வேறுபாடு பலவாறு காணலாகிறது.

மொழி, துறைவேறுபாடுகளினாலும், மாறுபடுகிறது. பொதுவான தமிழில் 'வரவு' வருதலையும், 'செலவு' செல்லுதலையும் குறிக்கும். இச்சொற்கள் வணிகர்கள் பேச்சில் வந்த பணத்தையும், செலவான பணத்தையும் குறிக்கும். பொதுவான தமிழில் 'பெயர்' என்பது வேறு. அச்சொல் இலக்கணத்தில் இடம் பெறின் நால்வகைச் சொல்லின் ஒருவகை என்றாகிறது. 'வினை' என்றால் தொழில், செயல், வேலை எனறு பொதுவான் தமிழில் பொருள் படும். ஆனால் சமயத்துறையில் 'ஊழ்வினை' என்றும், இலக்கணத்தில் ஒருவகைச் சொல்லைக் குறிக்கவும் பயன்படுகிறது.

சொற்கள் பொதுவான ஒலிப்பினின்று வேறு வகையாக ஒலிக்கப்படுவதும் உண்டு. 'வாழைப்பழம்' என்பதைச் சில இடங்களில் 'வாயப்பயம்' என்றும், வேறு சில இடங்களில் 'வாளப்பளம்' என்றும் கூறுகிறார்கள். 'நிரம்ப நல்ல'வர் என்பதை 'ரொம்ப நல்லவர்' என்றும், சில இடங்களில் 'ரம்ப நல்லவர்' என்றும் கூறுகிறார்கள். 'எனக்கு' என்பதை

'னேக்கு' என்றும், 'உனக்கு' என்பதை, 'னோக்கு' என்றும் கூறுகிறார்கள். 'இருக்கு' என்பதை 'இருக்குது' என்று சிலரும், 'கீது' என்று சிலரும் ஒலிப்பார்கள். 'வந்தது' 'போனது' முதலான சொற்களை 'வந்துச்சி' 'போச்சி' என்பர். பாய்கிறது என்பதைப் 'பாயுது' என்றும், 'பிறக்கிறது' என்பதைப் 'பிறக்குது' என்றும் பாரதி பாடுவர். இவைகளை இலக்கணத்தில் 'மரூஉ' என்று குறிப்பிடுவர். உயர்ந்தோர், பெரும்பான்மையோர் கொச்சையாக ஒலிக்கும் சில ஒலிகளை, மரூஉ என்று கொள்கின்றனர். ஆனால் தாழ்ந்தோர் பேசுவதை அவ்வாறு கொள்வதில்லை.

தொல்காப்பியர் செந்தமிழ் நிலத்து வழக்குகளை இயற்சொல் என்றும், பன்னிரு நிலத்து வழக்குகளைத் திசைச் சொற்கள் என்றும், நூ. 273 இல் குறிப்பிடுவர். நன்னூலார் பிற மொழிச் சொற்களையும் திசை வழக்குகள் என்பர். திசைச் சொற்களுக்குக் காட்டாக உரையாசிரியர்கள் இலக்கியத்திலிருந்து எடுத்துக் காட்டுவனவாகக் கீழ் வருவன சில.

'பசு' என்பதற்கு 'பெற்றம்' என்றும், 'சோறு' என்பதற்கு 'சொன்றி' என்றும் தென்பாண்டி நாட்டிலும், 'தாய்' என்பதற்கு 'தள்ளை' என்று குட்ட நாட்டிலும், 'தந்தை' என்பதற்கு 'அச்சன்' என்று குடநாட்டிலும், 'லஞ்சம்' என்பதற்கு 'கையர்' என்று கற்கா நாட்டிலும், 'தோட்டம்' என்பதற்கு 'கிழார்' என்று வேணாட்டிலும், 'சிறுகுளம்' என்பதற்கு 'பாழி' என்று பூமி நாட்டிலும், 'வயல்' என்பதற்கு 'செய்' என்றும் 'சிறு குளம்' என்பதற்கு 'கேணி' என்றும் பன்றி நாட்டிலும், அருவா நாட்டிலும், 'புளி' என்பதற்கு 'எகின்' என்று அருவா வடதலை நாட்டிலும், 'தோழன்' என்பதற்கு 'எலுவன்' என்றும் 'தோழி' என்பதற்கு 'இகுளை' என்றும் சீத நாட்டிலும், 'நீர்' என்பதற்கு 'வெள்ளம்' என்று மலை நாட்டிலும், 'தாய்' என்பதற்கு 'ஆய்' என்று புனல் நாட்டிலும் வழங்கிய பன்னிரு நிலத்து வழக்கினவாகக் கூறுவர்.

இவ்வாறு இடத்திற்கு இடம் பேச்சு வேறுபாட்டாலும், துறை வேறுபாடு, திசை வழக்குகளினால், இவை பெரும்பான்மை பொது மொழியோடு ஒத்தும், சிறுபான்மை வேறுபட்டும் அமையும். இவ்வித வெவ்வேறாக உள்ள வழக்குகளைக் கிளை மொழி (dialect) என்பர்.

இவ்விடத்தே கிளைமொழிக்கும், குறுமொழிக்கும் உள்ள வேறுபாட்டை ஓர்தல் வேண்டும். கொச்சைத் தன்மை சொற்

களில் ஒலியில் ஏற்படாமல், பொருளில் ஏற்படின் அவை கொச்சைமொழி அல்லது குறுமொழி (Slang) எனப்படும்.

பணமிருந்தால் நடக்கும் என்று சொல்லாமல் அந்தச் சொல்லால் பயன்குறைவு என்று உணர்ந்து அதற்குப் பதிலாக 'வெள்ளையுப்பன் இருந்தால் நடக்கும்' என்று மாற்றிச் சொல்லுதல், அடிகொடுப்பேன் உதைகொடுப்பேன் என்று சொல்லாமல் 'பூசை கொடுப்பேன்' என்று சொல்லுதல், வாணிகத்தில் இழப்பு ஏற்படின் 'மொட்டையாய் விட்டது' என்பது தேர்வில் தோல்வியுறின் 'தேர்வில் கோட் அடித்தார்' 'பல்டி போட்டான்' என்பது, உணவு விடுதியை 'மாமியார் வீடு' என்பது, ஏமாற்றுதலைக் குறிக்க 'கம்பி நீட்டுகிறான்' 'காது குத்துகிறான்' 'குல்லாய் போடுகிறான்' என்பது, பொய் பேசின் 'கயிறு' திரிக்கிறார்! என்பது முதலானவும், இவை போன்ற பிறவும் குறுமொழிகளாகும்.

இந்தப் புதுச்சொற்கள் கிளைமொழி ஆகா. கிளைமொழி என்பது ஒரு மாவட்டத்தில், ஒரு கூட்டத்தில், ஒரு துறையில் வழங்குவதாகும். ஆனால் குறுமொழி பழகிப் போன பழஞ்சொற்களைப் பயன்படுத்தாமல், புதுமை நோக்கோடும், கவர்ச்சி வேண்டியும் படைக்கப்படும் புதுச் சொற்களாகும். இந்த நிலையில் பழைய சொற்கள் கைவிடப்படுகின்றன. அதனால் நீண்ட வாழ்வின்றி அவ்வப்போது மறைந்து போவனவாம். கிளை மொழியோ நீண்ட வாழ்வுடைத்தாம்.

இந்தக் கிளை மொழிகள் பொது மொழியோடு பெரும்பான்மை வேறுபட்டுச் சிறுபான்மை ஒத்து அமையுமெனில் அவை தனி மொழிகளாக அமைந்துவிடுகின்றன. இன மொழியாக மாறிவிடுகின்றன. மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகியன இப்படிக் கிளைமொழிகளாக இருந்து மாறி இனமொழியாக ஆனவைகளே என்பர்.

1915 இல் பேரா. கில்பர்ட் சிலேட்டர் என்பவர் அப்போதிருந்த சென்னை மாநிலப் பேரவையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளுக்கும் பொது வரிவடிவம் கொண்டு வர வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார். " இந்த நான்கு மொழிகளின் வரி வடிவத்தை விட்டுப் புதிய வரிவடிவம் ஒன்றை ஏற்பதானால், எளியதும், தட்டச்சுப் போன்றவற்றிற்கு மிகவும் சாதகமானதும் எழுதப்படிக்க இலகு

வானதுமான ஒரு வரிவடிவத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்'' என்ற அத்தீர்மானம் பெரும்பான்மையான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது என்பதைத் தற்போது இந்திராகாந்திப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருக்கும் முனைவர். வா. செ குழந்தைசாமி தன்னுடைய அறிவியல் தமிழ் என்ற நூலில் பக். 153 ல் குறிப்பிட்டு உரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்தலாம் எனவும், ''தமிழ் உரோமன் வரிவடிவத்தில் எழுதப்படுமானால் பொறியியல், மருத்துவம் போன்ற அறிவுத் துறைகளில் வெளியிடப்படும் நூல்கள் தென்னிந்தியா முழுவதும் பயன்படுத்தப்படும். இன்று திராவிட மொழிகள் தனித்தனியாக நிற்பதற்கே பெரும் காரணம் வரி வடிவம்தான்'' எனவும் அந் நூலில் பக்-148-149 ல் குறிப்பிடுவர்.

ஒரு மொழியில் ஒலி வடிவம் மாறாதது. ஆதலின் அத்தகு ஒலியியலுக்கேற்ப வரிவடிவம் அமைகிறது. ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு இடத்திலும் கண்டுபிடிக்கப்படும் கருவிகளுக்கேற்ப வரிவடிவத்தை மாற்றிக்கொண்டே போவது என்பது மொழியியலின் இயல்பிற்கும், இயற்கைக்கும் பொருந்தாததாகும். ஆதலின் பேரா. கில்பர்ட் சிலேட்டர் கூறியதுபோல் தட்டச்சு, இக்காலத்தே கணினி இனி வருங்காலத்தே கண்டுபிடிக்கப்படும் அறிவியற் கருவிகளுக்கு ஏற்ப வரி வடிவத்தை மாற்றிக் கொண்டே போவது என்பது ஒலியியலுக்கேற்ப வரிவடிவா? கண்டுபிடிக்கப்படும் கருவிகளுக்கேற்ப வரிவடிவா? என்ற சிக்கலைத் தோற்றுவித்துவிடும். இது ஒலியியலை ஒட்டி அமைக்கப்படும் வரி வடிவக் கோட்பாட்டையே தகர்த்துவிடும்.

இதனால் வரி வடிவே மாறாதது என்று கூறவியலாது. அம்மாற்றம் இயற்கையாய் இருத்தல் வேண்டும். தன்னியல்பு மாற்றங்களாக இருத்தல் வேண்டும்.

பொது மொழியோடு பெரும்பான்மை வேறுபட்டுத் தனி மொழிகளாக மாறி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் அறிவியல்துறை உட்பட பல்வேறு துறைகளில் அந்தந்த மாநில இனமொழிகளாக அவற்றிற்குரிய சூழ்நிலையோடு இயல்புகளும், பெற்று வளர்ந்துவிட்டன. அவற்றில் தனித்த ஒலியியலுக்கேற்ப வரி வடிவங்களும் உருவெடுத்துள்ளன.

இந்நிலையில் வா. செ. குழந்தைசாமி கூறுவது போல் பொறியியல், மருத்துவம் போன்ற அறிவுத்துறைகளில்

உரோமன் எழுத்துக்களைத் தமிழ் உட்பட தொடர்பான இன மொழிகளில் பயன்படுத்தப்படவேண்டுமெனில் ஒலியியல் கோட்பாட்டுக்கேற்ப அமைந்த இம்மொழிகளின் வரிவடிவக் கோட்பாட்டையே தகர்ப்பதாக அமையும்.

மொழியின் ஒலியியல் என்பது அவ்வப்பகுதியில் வாழும் மக்களின் சூழலுக்கேற்ப அமைவதாகும். அவ்வொலியியலுக் கேற்ப நுட்பமாக உருவாக்கப்படும் தோற்றப் பொருளே வரி வடிவம். இவ்விதமிருக்க இவ்வினங்களுக்கு அயலான சூழ் நிலையில் வாழும் மக்களின் ஒலியியலுக்கேற்ப அமைந்த உரோமன் வரிவடிவம் எங்ஙனம். இவ்வினங்களின் வரி வடிவத்திற்கேற்ப இயைந்து செயல்படக்கூடும்? இந்த மொழியியல் முரண்பாடு பெருங்கேட்டையே விளைவிப்பதாக அமையும்.

உரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்தி அறிவியல் நூல்கள் எழுதப்படுமானால் அவை தென்னிந்தியா முழுவதும் பயன்படுத்தப்படும் என்பர். உரோமன் எழுத்துக்களை மக்கள் பயின்று எழுத முற்படுவதைவிட, அவ்வவ்மொழிகளிலேயே அறிவியல் நூல்கள் எழுதப்படுமானால், புதுவதாக எழுத்துக் களைக் கற்றுத் தேர்தல் என்ற தேவையற்ற சுமை நீங்குகிறது. பழகிப்போன எழுத்துக்களில் பயில்வதனாலேயே கற்றல் சிறந்தோங்கும். அதனாலன்றோ தமிழரும், பிற இந்திய மாநிலத்தோரும் அயல்மொழி பயிலச் செலவழித்தே வறிதாகி அறிவியலில் முன்னேறாது போயினர் என்பர்.

கிளைமொழி, தனிமொழியாகி மொழி வழிப்பிரிந்த இனங் களாக மாறி அவ்வம் மொழிகளிலேயே வாழ்வுக்குத் தேவை யான எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டுத் தத்தம் மொழிகளில் புதிய இயல்புகளோடு தனித்தன்மையும் எய்திய நிலையில் திராவிட மொழிகள் தனித்தனியாக நிற்பதற்கே பெரும் காரணம் வரிவடிவம் தான் என்று கூறி அதற்கு மாற்றாக உரோமன் எழுத்தைப் பயன் படுத்தலாம் என்பது, தமிழ் உட்பட அனைத்து திராவிட மொழிகளின் வரிவடிவங்களையே அழிக்கின்ற பரிந்துரைப்பாகும்.

வா. செ. குழந்தைசாமி கூறுவதுபோல் இக்கிளை மொழிகள், தமிழினின்று விளைந்தவையே. ஆதலின் இம்மொழிகளுக்குத்

(தொடர்ச்சி 104ம் பக்கம் பார்க்க)

கல்வெட்டுத் தமிழ் — சில தனித்தன்மைகள்

இரா. பாக்கியலட்சுமி,
பாரதியார் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.

முன்னுரை :

மன்னவர்கள் தங்கள் வாழ்நாளில் செய்த அறங்களும், அவர் தம் வெற்றிச் செய்திகளும் காலங்காலமாகப் போற்றப்பட வேண்டும் என விரும்பினர் இவற்றைக் கற்களில் பொறிக்கும் பணியினை மேற்கொண்டு செயற்படுத்தினர் அவர்களது அதிகாரிகள். காலப்போக்கில் இது ஒரு மரபாகவே மாறி விட்டது. தங்கள் நாடுகளை விரிவுபடுத்த மன்னர்கள் எண்ணியமை போலவே மக்களிடமிருந்து புகழாரங்களைச் சூட்டிக் கொள்ளவும் அவர்கள் விரும்பினர். எனவே, இது போன்ற செய்திகளை உள்ளது உள்ளபடியே பிற்காலச் சந்ததியினருக்குத் தெரிவிக்கும் முறையில் கற்களில் செய்திகளைப் பொறித்து வைத்தனர். இவ்வாறு பொறித்தவர்கள் தங்கள் திறமைக்கும் கல்விக்கும் ஏற்பச் செய்திகளைக் கற்களில் வடித்தனர். கற்களைச் செதுக்குபவர், கற்களில் எழுத்துக்களைப் பொறிக்கும் சிற்பிகள் எல்லோருமே கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்திருக்க முடியாது மேலும் கற்களில் பொறிப்பதற்காகத் தேர்த்தெடுக்கப்படும் செய்திகளும் இப்போது உள்ளது போல் ஏடுகளில் எழுதப்பட்டுச் சிற்பிகளுக்கு வழங்கப்பட்டிருக்காது. அரச ஆணைகளையும் பொதுச் செய்திகளையும் அக்காலச் சிற்பிகள் வாய்மொழியாகவும் செவிவழிச் செய்தியாகவும் கேட்டுப் பின்னர் அவற்றைக் கற்களில் வடித்திருப்பர். தற்காலப் பத்திரங்கள் (documents) எழுதும் முறையும் இம்முறையை ஒட்டியதாகவே அமைந்துள்ளதோடு இவற்றை எழுதுவோரும் அதிகப்படிப்பறிவில்லாதவர்கள் என்பதே

(104ம் பக்க தொடர்ச்சி)

தமிழே பொது வடிவமாகத் தற்போதும் இருக்கத்தக்க பொருத்த முடையதாகும். எனினும், இம்மொழிகள் புதிய இயல்புகளும் பெற்று, தனி மொழிகளாகப் பல்வேறு துறைகளில் வளர்ச்சி யடைந்துவிட்ட நிலையில் அவை அவைகளாகவே வளர்வது தவிர்க்க இயலாததாகவே உள்ளது.

மேற்கூறப்பட்ட கருத்துச்சான்றாக அமைகின்றது. அதிகக்கல்வி கற்காதவர்களிடமும் கவிபாடும் திறமை இருப்பதுபோல் எழுத்துக்களைப் பொறிக்கும் சிற்பிகளிலும் சிலர் இருந்திருக்கலாம். இவர்கள் தாம் கேட்ட ஆணைகளையும், செய்திகளையும் தங்கள் திறமைக்கு ஏற்றவாறு பொறித்திருக்கக்கூடும்.

மொழிப் பயன்பாடு என்பது மனிதனுக்கு மனிதன் மாறுபட்டே அமையும். பேசும், எழுதும் மொழியானது எல்லோரிடத்தும் ஒன்று போலவே வெளிப்படுவதில்லை. இலக்கண விதிகள் ஒன்றாக அமைந்திருப்பினும் மொழிப்பயன்பாடு என்பது மனிதனுக்கு மனிதன் வேறுபட்டே அமைந்துவிடுவதை நாம் அறிவோம். கல்வெட்டுக்களிலும் மொழிப் பயன்பாடு அரசர்கள், சாதாரணமக்கள் என்ற மாற்றங்களுக்கேற்ப மாறுபட்டிருப்பதை அறியலாம். பல இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் அவற்றின் மொழியமைப்பில் குறிப்பாக கிரந்த எழுத்துக்களின் பயன்பாடு, பிறமொழிச் சொற்பயன்பாடு, இலக்கணப் பிரிவுகளின் மாறல்பண்பு போன்றவற்றில் பெரும்பாலும் ஒத்திருப்பதை நம்மால் காண முடிகிறது.

2 நோக்கம் :

கர்நாடக மாநிலத்தில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டுக்களின் சிறப்புக் கூறுகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரைக்குப்பயன்படுத்தப்பட்டுள்ள தரவுகள் 'எபிகிராபியா கர்நாடிகா' (Epigraphia Carnatica) என்னும் கர்நாடக மாநிலக் கல்வெட்டாய்வுத் துறையினரின் சேகரிப்பு நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.[1]

இக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சோழர்கள் ஹொய்சளர்கள் காலத்தவையாகத் தமிழும் கிரந்தமும் கலந்த எழுத்துக்களிலேயே பொறிக்கப்பட்டுள்ளன. வடமொழிக்கலப்பு அதிகமாகக் காணப்படுவதுடன் கன்னடநாட்டில் வெட்டப்பட்டிருப்பதன் காரணமாக கன்னடமொழியின் தாக்கமும் இக்கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இக்கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துநிலை, சொல்நிலை, தொடர்நிலை போன்றவற்றின் மாற்றங்களை ஒவ்வொன்றாக கீழே காண்போம்.

3. எழுத்துநிலை மாற்றங்கள்—தனித்தன்மைகள் :

கல்வெட்டு எழுத்துக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி ஆராயும் நிலையில் எழுத்தமைப்பில் பல்வேறு குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் காண முடிகிறது. அவற்றை,

3.1 மூக்கொலி + தடையொலிச் சேர்க்கை N + P

ஓரிடத்தில் வழங்கியிருக்கும் பேச்சுமொழியின் தாக்கம் அவ்விடத்தில் உருவாகும் அல்லது அமையும் இலக்கியம் போன்றவற்றில் பிரதிபலிப்பது போலவே கல்வெட்டுக்கள் செப்பேடுகள் போன்றவற்றிலும் பிரதிபலித்திருப்பது அவற்றைக் கூர்ந்து நோக்கும் போது தெரிய வருகிறது. இதைப் போலவே பிறமொழி எழுத்தமைப்பின் தாக்கமும் இருப்பதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, கர்நாடக மாநிலத்தமிழ்க் கல்வெட்டுக்களில் ஓரின மூக்கொலிகள், தடையொலிகளுக்கு முன்னர் வருவது சில சொற்களில் காணப்படவில்லை.

i) —ந்த்— > —ன்த்—

குன்தாணி (< குந்தாணி)

(Hosekote Taluk, 162)

ii) —ஞ்ச்— > —ன்ச்—

காஞ்சிபுற (< காஞ்சிபுர)

(Mulbagal Taluk, 78)

iii) —ங்க்— > —ன்க்—

புன்கநூரான (< புங்கனூரான)

(Channapatna, 42a)

இது போன்ற எழுத்தமைப்புக்கள் (ஒலியன் சேர்க்கைகள் எல்லாமே கன்னடமொழியில் காணப்படுபவையாகும். எனவே கல்வெட்டினைப் பொறித்தவர்கள் ஒலியெழுத்துக்களைத் தங்களையறியாது பொறித்திருக்க வேண்டும்.

3.2 மொழியிடை, இறுதியில் 'ங' வருதல்

மொழியிடை, மொழியிறுதி போன்ற இடங்களில் 'ன' கரம் பயன்படுத்துவதற்கு மாறாக 'ந' கர எழுத்துப் பயன்பாடு இருந்தமை தெளிவாகிறது.

i) —ன்ற்— > —ந்ற்—

கொந்ற (< கொன்ற)

(Srinivasapur, 48)

ii) — ன் > — ந் —

போவாந் (< போவான்)

(Srinivasapur, 8)

iii) — ன் — > — ந் —

மீநவர் (< மீனவர்)

(Nelamangala, 35)

மொழியில் 'ந்' வருமிடங்கள் தெளிவாகச் சுட்டப்படாத நிலையில் இவ்வெழுத்துக்கள் மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள எடுத்துக்காட்டுக்களின் மூலம் தெரியவருகிறது.

3. 3 மொழிமுதலில் 'ன' கரம் வருதல்

மேற்குறிப்பிட்ட 'ந' கர, 'ன' கரங்களின் தெளிவின்மையோடு,

நூ > னூ

னூறு (< நூறு)

(Kolar, 131)

இங்கு 'ன' கரம் மொழி முதலில் வராது என்ற வரன் முறையும் பின்பற்றப்படவில்லை எனலாம்.

3. 4 'யா' எனபது 'இயா' என வருதல்

மொழி முதலில் 'ய' கரம் வராது என்ற எண்ணம் கல்வெட்டுக்களில் எழுத்தைப் பொறிக்கும் சிற்பிகளின் ஆழ்மனத்தில் இருந்திருக்கவேண்டும்.

யா > இயா

இயாண்டு (< யாண்டு, ஆண்டு)

(Srinivasapur, 36)

இதன் விளைவே சொல்லின் முன் இகரம் சேர்ந்து வருகின்ற நிலை எனலாம்.

3.5 'ள' கர 'ழ' கர வேறுபாடுகளும் 'ர' கர, 'ற' கர வேறுபாடுகளும்

சில கல்வெட்டுச் சொல்லமைப்புகளில் ஒரு குறிப்பிட்ட எழுத்திற்கு பதிலாக அதே வகையைச் சார்ந்த மற்றொரு எழுத்து இடம் பெறுவதைக் காணலாம். குறிப்பாக 'ள' கர 'ழ' கரங்கள் மற்றும் 'ர' கர 'ற' கரங்கள் போன்றவற்றின் பயன்பாட்டில் இந்நிலை காணப்படுகிறது.

i) —ள்—>—ழ்—

தொழாயிரத்து (< தொளாயிரத்து)
(Hosekoto, 101)

கேழ்வி (< கேள்வி)
(Malur — 37)

ii) —ர்—>—ற்—

தற்மபத்தினி (< தர்மபத்தினி)
(Bangalore—64)

கூறிலை (கூரிலை)
(Kolar, 181)

இவ்வாறு ஓர் எழுத்திற்கு மாறாக மற்றொரு எழுத்தை அமைப்பதற்கு எழுதுபவர் பெற்றுள்ள அவ்வெழுத்தைப் பற்றிய யூகம் அல்லது கருத்தே காரணமாக அமைகிறது.

3 6 'ரு' கரத்திற்கு மாறாக 'இ' கரம் வருதல்

'ரு' என்ற உயிரெழுத்து இந்தோ ஆரிய மொழிகளில் வருவது. திராவிடமொழிகளில் இத்தகைய உயிரெழுத்து இல்லை அதனால் இதற்கு மாறாகத் தமிழ் 'இ' கரத்தை அமைத்து எழுதும் முறை வழக்கிலுள்ளதை இது போன்ற கல்வெட்டு அமைப்பு காட்டுகிறது எனலாம்

எ. கா. ரு > இ

இஷப (< ருஷப).
(Malur, 83)

தமிழ்ப்படுத்தி எழுதும்போது 'இடப' (இஷப) என்று எழுதப்படுவதை நாம் இன்றும் காணலாம்.

3.7 எழுத்துக்களை ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதல்

பணினா, தனிச்சை (Malur, 14)
ண ன

சுபமஸ (Malur, 14)
து

வ தாப சக வதி (Bangalore, 51)
த

போன்ற மேற்கூறப்பட்ட சொற்களில் எழுத்துக்கள் இரட்டிக்கும் போதும் இருவேறுமெய்கள் சேர்ந்து வரும் போதும் அவற்றை ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதும் பழக்கமும் மேல் எழுத்தை

தனி மெய்யெழுத்தாக உச்சரித்துக் கீழ் எழுத்தை உயிர்மெய் யாக உச்சரிக்கும் முறையும் காணப்படுகிறது. துணைவடிவத் தினை மெய்யின் மேலெழுதி உச்சரிக்கும்போது உயிரோடு சேர்த்து உச்சரிக்கும் முறை காணப்படுகிறது. வடமொழி மற்றும் கிரந்த எழுத்துக்களின் அமைப்பு முறையாக இருப்பினும் கன்னட மொழியில் தற்போதும் பின்பற்றப்பட்டு வரும் எழுத்து முறையே இது எனலாம்.

3.8 கூட்டெழுத்தமைப்பு

கூட்டெழுத்துக்களான கர், த்ர், ஜ்ய் போன்ற எழுத்துக்கள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்படும போது ப மற்றும் லி என்ற குறியீடுகளை 'ர' கர 'ய' கர ஒலிகளுக்கு மாற்றாகப் பயன் படுத்துகின்றனர்.
எடுத்துக்காக,

வதாபசக்வதி (Bangalore, 51)
த
ராஜலித்துக்கு (Bangalore, 11)

போன்ற சொற்களில் 'ர' கர, 'ய' கர ஒலிகளுக்குத் துணை வடிவங்களாக இவற்றைத் தமிழ் எழுத்துக்களிடையே பயன் படுத்தியுள்ளது தெரியவருகிறது.

3.9 'ர'கர ஒலி எழுத்தில் உச்சரிப்பு மாற்றம்

'ர'கர மெய்களை எழுத்து வடிவத்தில் சொற்களில் பயன் படுத்தும்போது ஓர் எழுத்து தள்ளிப்பின்னால் எழுதியும் உச்சரிப்பில் முதலில் உச்சரித்தும் வரும் நிலை காணப்படுகிறது.

சதுவே ஆதி (< சதுர்வேதி)
(Bangalore 11)

ஸவஆதாரி (< சர்வதாரி)
Mulbagal, 71)

போன்ற சொற்களின் மூலம் உச்சரிப்பு முறை மாறுபட்டு அமைந்துள்ளது. எழுத்துக்கள் வேறுபட்டாலும், ஒலியமைப்பு மாறாமல் இன்றும் கன்னடமொழியில் இம்முறை பின்பற்றப் படுகிறது.

3.10 அனுஸ்வர் என்ற எழுத்தின் பயன்பாடு

சொற்களில் மெல்லின மெய் எழுத்துக்கள் வருமிடங்கள் எல்லாம் அனுஸ்வர்க (O) எழுத்தின் மூலம் குறிக்கப்படுகின்றன.

நாOடில் (< நாட்டில்)
பொOனும் (< பொன்னும்)
விOடேO (< விட்டேன்)
(Kolar, 122)

தமிழ்மொழியில் இது போன்ற எழுத்துமுறை இல்லை. எனவே, இவற்றைப் பொறித்தவர்கள் இனவேறுபாடின்றி மெய்யெழுத்துக்கள் வருமிடங்களில் எல்லாம் இதனைப் பயன்படுத்தியுள்ளமை அறியலாகிறது.

மேற்குறிப்பிட்ட எழுத்து மாற்றங்கள், எழுதும் முறைகள் போன்றவை வேற்றுமொழி இடையீடு காரணமாகத் தமிழில் மாறிவந்துள்ளவையே.

4. சொற்கள் :

கல்வெட்டுத் தமிழில் அமைந்துள்ள சொற்களின் பயன்பாட்டை ஆராயும் நிலையில் பல சொற்கள் பேச்சு வழக்கிலிருந்தும் பிறமொழிகளிலிருந்தும் வழக்கிற்குக் கொண்டு வரப்பட்டு, அவற்றுள் சில தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள நிலையையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

4.1 தமிழாக்கம் செய்யப்பட்ட சொற்கள்

கமம் (க்ரம)
(Srirangapatna, 67)
தன்மம் (< தர்மம்)
(Srinivasapur, 36)
வணிஜைசமக்கள் (< வணிகமக்கள்)
(T. Narasipur, 138)
சீமார கவுண்டன் (< ஸ்ரீ மார)
(Hosekote, 140)

போன்ற சொற்கள் தமிழொலிகளுக்கு ஏற்ப மாற்றம் பெற்றமையும், சில தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள நிலையும் தெரிகிறது.

4.2 பேச்சு வழக்குச் சொற்கள் — பயன்பாடு

கழிச்சு (கழித்து)
(Mulbagal, 188)
வச்ச (< வைத்த)
(Bowringpet, 7 b)

போகையில் (< செல்லும்போது)
(Hosekote, 98)

வித்தேந் (விற்றேன்)
(Bowringpet, 56)

குடுத்தேன் (< கொடுத்தேன்)
(Hosekote, 109)

போன்ற பேச்சுவழக்குச் சொற்கள் அதிகமான அளவில் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

4.3 பிறமொழிச் சொற்கள்—பயன்பாடு

புந (< பிறகு)
(T. Narasipur, 4)

தம்ம (< தம்பி)
(Hosekote, 139 Front)

போன்ற கன்னட மொழிச் சொற்களும்,

ஸ்தானத்தார், கோத்திரம், வருஷம், ஈஸ்வரம், க்ஷேத்திரம் (Kolar, 81) போன்ற வடமொழிச் சொற்களும் மொழிக்கலப்பிற்குச் சில எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

4.4 சொல்லமைப்புகள்

மேற் குறிப்பிட்ட சொல் வகைகளோடு சொல்லமைப்புக்களிலும் இலக்கணக் கூறுகளிலும் மொழி மாற்றம் காணப்படுகின்றன. அதாவது பிறமொழிச் சொற்களோடு தமிழ்மொழி உருபுகள் சேர்ந்து அமைந்துள்ள நிலை காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக,

போகங்களுக்கும்
தாராபூர்ணமாக } (Malur, 100)
சுவாமிகளும் (Kolar, 81)

போன்ற வடமொழிச் சொற்களுடன் தமிழ் உருபுகள் (- கள், - உம் - ஆக) பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் போன்றே கன்னட மொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்களிலும் இந்நிலையினைக் காண முடிகிறது.

பாரம்பரியவாகி (< பாரம்பரியமாக)
(< Cintamani, 60)

என்ற சொல்லில் — ஆக என்ற உருபு ஆகி என்று மாறி வந்துள்ளமை புலப்படுகிறது. மேலும் சில கன்னடச் சொற்கள் கன்னடமொழி உருபுகளுடனேயே பயன்படுத்தப்பட்டுள்ளதை யும் காண்கிறோம்.

கண்டன் (< கண்ட, வீரபுருஷன்)
(Cintamani, 83)

என்ற சொல்லில் கண்ட என்ற கன்னடமொழிச் சொல் இறுதியில் மெய்யெழுத்தோடு (அன் என்ற ஆண்பால் ஒருமை உருபு ஏற்று) முடிந்துள்ளமையும் தெரிகிறது.

5. தொடரமைப்பு :

கல்வெட்டுத் தமிழில் தொடரமைப்பு மாறுபாடுகளைப் பின் வரும் எடுத்துக்காட்டுக்களின் மூலம் அறியலாம்.

5.1 முரண்தொடர்

பெயர், செயப்படுபொருள், வினை என்ற பொது வரிசை அமைப்பிலிருந்து மாறுபட்ட முரண்தொடர் அமைப்பினைக் கீழ் வரும் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

‘பாலாண்டை நாயன் கங்கேஸ்வரமுடையாற்கு திருநந்தா விளக்கும்
காலச்சந்தி அமுது படிக்குமாகப் பெரியேரி முதல்முடையில்
கண்டகக் கழனியும் கண்டகக் கொல்லையும் விட்டமைத்த
பாலாண்டை நாயன் தர்மம் (Malur, 98)

என்ற இக்கல்வெட்டுத்தொடரில் எழுவாய் முதலில் இருந்தாலும் தொடர் இறுதியிலும் வருகிறது. தர்மத்திற்கே பாலாண்டை நாயன் தர்மம் என்று பெயரடையாகவும் வந்திருக்கலாம். மேலும் பயனிலை என்பது வகிதகறியும் முறையிலேயே இதில் அமைந்துள்ளது

5.2 முன்னிலைப்படுத்தும் தொடர்

ஒரு செயலைச் செய்தவனை முன்னிலைப்படுத்திக் கூறிக்காரண வினையில் முடியும் தொடர்கள் முன்னிலைத் தொடர்கள் எனப்படும்.

‘சாணாண்டை ரிஷப தேவரை பிரதிஷ்டை
பண்ணுவித்தான். பண்ணினவன் இராசாசாரி
பேரன் பெருமாப்பிள்ளை, (Cintamani, 85)

இதில் பெயர் முதலிலும் செயப்படு பொருள் இடையிலும் காரணவினை இறுதியிலும் வந்துள்ளன. பிறவினையில் முடிந்த தொடர் அடுத்த அடியில் வினையாலணையும் பெயரில் தொடங்குகிறது.

5.3 பல வாக்கியங்களை உள்ளடக்கிய தொடர்கள்

இத்தொடரில் பெயர்ப் பயனிலையின் முன்னர்ப் பல பெயரடைகள் வருகின்ற முறை காணப்படுகிறது.

> 'ஸ்வஸ்திஸ்ரீ சகரையாண்டு 1198ம் ஆண்டான தாது வருஷத்து மகரரவி 28ந்தியதி ஞாயிற்றுக் கிழமையும், பூர்வபக்ஷத்து ஏகாதசியும் மிருகசீரிஷமு மான இற்றைநாள் ஐயங்கொண்டசோழ இளவஞ்சிய ராயர் முதலிகளில் பொன்னப்பிள்ளைமகன், அம்மான் வயிராண்டை பிரதிஷ்டித்த நாயனார் பெங்கீஸ்வர முடையார்க்கு சிறு காலைச் சந்தி அமுது செய்தருளுவதாக கல்ப்பள்ளி மடுவில், என்குட்டை யில் கழனியில், முக்கண்டகக் கழனி தேவதானமாக சந்திராதித்தவரை செய்வதாக விட்டேன் தனிமை கீக்கினாரென' (Mulbagal, 184)

இதில் தோன்றா எழுவாயுடன் பலதொடர்கள் மறைந்துள்ளன. அதாவது தனிமை நீக்கினார் என்ற பெயருக்கு முன் மறைந்துள்ள பல தொடர்களை விரித்துத் தனித்தொடர்களாகக் கூறலாம். கற்களில் பல தொடர்கள் எழுத இடம் போதாமையாலோ, குறைந்த இடத்தில் அதிக செய்திகளைக் கூறும் முகத்தாலோ இவ்வாறு அமைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

5.4 பொருள் மயக்கம்தரும் தொடர்கள்

> 'கோயிலில் மடத்து நிர்வாகம் செய்வார் முத்தாண்டார் முத்தரும் வாசாண்டைமகன் பச்சை நாயனும் முளவாயில் சன்மதானப் பெருந்தெருவில் வணிகபுர நாதரான வைஸ்ய வாணிய நகரத்தாரில் வடவாணியன், பெரிய பெருமாள் காமாண்டை செட்டியார் இவர்கள் தானமாக நாள்தோறும் ஒரு திருப்போர்க்கும் ஒருபொழுது படைப்பதாக வாங்கின பொன் 21'. (Mulbagal, 74)

(1) வடவாணியன், பெரியபெருமாள், காமாண்டை செட்டியார் இவர்கள் மூவரும் கொடுக்க முத்தாண்டார் முத்தரும் பச்சை நாயனும் வாங்கின பொன் 21.

(2) இந்த ஐந்துபேரும் வேறு யாரோ கொடுக்க வாங்கிய பொன் 21.

என்ற இருவகைப் பொருளும் இத்தொடருக்குக் கொள்ள முடிவதால் இதைச் சரியான பொருளை உறுதி செய்ய முடியாத மயக்கம் தரும் தொடர் என்று கொள்ளலாம்.

5.5 விடுபட்ட சொற்களைக் கொண்டதொடர்கள்

'செய்வித்த அம்பும் தொட்டியும்'

(channapatna, 86)

இத்தொடருடன் இவை என்ற ஒரு சொல் இறுதியில் இருப்பின் தொடர் வழுவற்றதாக அமையும் நிலைபெறும். எனினும் பொருள் வெளிப்பாடு இருப்பதால் இது வழுவற்றதே.

மேற்கூறிய எழுத்து அமைப்புகள், சொல்லமைப்புகள், தொடரமைப்புகள் போன்ற இவையெல்லாம் கல்வெட்டுக்களில் காணப்படும் சிறப்பு எனலாம். அக்கால அரசர்களின், மக்களின் வாழ்வோடு, அவர்கள் கால மொழிப் பயன்பாட்டையும், சமுதாய அமைப்பினையும் அறிந்துகொள்ள இக்கல்வெட்டுக்கள் அழியா ஆதாரங்களாகத் திகழ்கின்றன — எனின் மிகையன்று.

அடிக்குறிப்பு :

(1) Epigraphia Carnatika III rd Volume (1893) S P. C. K. Press. Madras.

கவிஞர் கண்ணதாசனின் 'மாங்கனி' ஓர் ஆய்வுக் கட்டுரை

ப. முருகானந்தம்,
தமிழ்த்துறை,
அ. வீ. வா. நினைவு பூண்டி புட்பம் கல்லூரி,
தஞ்சை

கவிஞர் கண்ணதாசனுக்கு நீண்டநாள் ஆசை, ஓர் காவியம் படைக்க வேண்டுமென்று. காவியம் படைக்கச் சரியான சூழ்நிலை கிடைக்கவில்லையாம். பின்பு ஒருநாள் சிறைச் சாலையில் கிடைத்ததாம்.

நண்பர்கள் உதவியுடன் 6 மணிநேரத்தில் ஆறு நாட்களுக்குள் எழுதி முடித்தாராம்.

காவியம் என்பது நினைத்த மாத்திரத்தில் எழுதி முடித்து விடும் கீர்த்தியல்ல. முத்தமிழின் சுவையை ஒருங்கே அமைத்து முத்தான கதையைத் தந்தால்தான் அது முழு காப்பியம் ஆகும் என்பார்கள்.

அந்த வகையில் கவிஞர் கண்ணதாசன் 'மாங்கனி' என்ற காவியத்தை நமக்குத் தந்துள்ளார்.

> கவிஞர் கண்ணதாசனின் கூற்று : "இக்காவியம் என்னுடைய கன்னி முயற்சியே" என்று குறிப்பிட்டுள்ளார். இருந்தும் இப்போது நாம் 'மாங்கனி' என்ற காவியத்தை சுவைக்கப் போகிறோம்.

> இக்காப்பியத்திற்கு கருவாய் அமைந்தது ஒரு வரலாற்றுச் சான்று என்று கூறுகிறார் கவிஞர்.

மோரிய மன்னன் அறுகையோடு மோகூர்க் குறுநிலப்பாண்டியன் பழையன் என்பான் பகைமை பாராட்டியதாகவும், அறுகைக்கு உதவியாகச் சேரன் செங்குட்டுவன் பழையன் மீது போர் தொடுத்ததாகவும் காணப்பட்ட ஒரு குறிப்பை வைத்துத்தான் இக்காவியத்தைப் புனைந்தேன் என்கிறார்.

இதில் அவரே படைத்தப் பாத்திரம் மூன்று. முதலாவது காவியத்தின் நாயகி, இரண்டாவதாக தென்னரசி, பொன்னரசி என்ற பாத்திரங்கள். மாங்கனியில் தோன்றும் காதல் பாத்திரங்கள் அனைத்தும் கவிஞரின் கற்பனையே.

கவிஞர் கண்ணதாசனுக்கு கற்பனை என்றால் தேனொடு கலந்த பலாச்சுளை, பாலொடு கலந்தப் பருப்பு, வாழையொடுச் சேர்ந்த கற்கண்டு சொல்லித்தரவேண்டுமா என்ன ?

'மாங்கனி' காப்பியத்தில் கவிஞரின் இயற்கை வர்ணனை, உவமைத்தன்மை, சந்தத்துடன் எழுதும் நடை அழகு, புற்றீசலென வந்துவிழும் கவிதை வார்த்தை, இப்படி எண்ணிலாச் சுவைகள் அவர் படைத்த 'மாங்கனி' என்னும் காப்பியத்தில் விறவிக் கிடக்கின்றன.

மாங்கனியில் காணும் இயற்கை அழகைக் காண்போம்

காவியத்தில் வரும் பகைவன் பழையன் அரசு வீற்றிருக்கும் இடம் மோகூர். அந்த மோகூரின் இயற்கை அழகைக்கவிஞர்,

" அழகு நகர், இருபுறத்து ஏறி கொண்டு
அணியணியாய்த் தென்னை மரம் சிலிர்த்து நிற்க
மழை முகில்கள் வான்மூட வெய்யிலின்றி
மந்தாரம் போட்டதுபோல், சிலுசிலுப்பில்
குழைமயில்கள் சுவரேறிக் கோட்டை சுற்றிக்
கூத்தாட "

என்று கவிஞர் வர்ணிப்பது நம்மை சிலுசிலுக்க வைக்கிறது.

அடுத்து இயற்கைக் காட்சி.

அரண்மனையில் தென்னரசியோடு அடலேறு பஞ்சணையில் அமர்ந்திருக்கிறான். தென்னரசி கனி, தேன், பால், நெய் இவற்றோடு அடலேறுவை நெருங்குகிறாள். அந்த நேரத்தில் காவிய நாயகன் அடலேறு மாங்கனியின் நினைவாக (காப்பிய நாயகி) இருக்கிறான். தென்னரசி கொடுத்த உணவுப் பண்டங்களை உண்டும், உண்ணாமலும் அரண்மனையை விட்டு வெளியே ஓடுகின்றான். மாங்கனியை தான் விட்டு வந்த இடத்தைப் பார்க்கிறான். அங்கே மாங்கனியை காணவில்லை. அந்த இடத்தில் கவிஞர்

" குளம் மட்டும் இருக்குதங்கே குமுதம் இல்லை
குலைக் காம்பு நின்றதங்கே கனிகள் இல்லை "

என்று பிரிவு ஆற்றாமையை இயற்கையொடு ஒப்பிட்டுக் காட்டுகிறார் கவிஞர்.

அட்டலேறு மாங்கனியை காணாது இருக்கும்பொழுது மாங் கனியை எண்ணிப்பாடுகின்றான்.

"நாற்று நிறப் பொற்சேலை
நடக்கும் உடல் எங்கேடி"

என்று அவள் உடுத்தும் சேலையை பசுமை நிறைந்த நாற்றுக்கு ஒப்பிடுகிறார் ஆசிரியர்.

அடுத்து மாங்கனியில் கவிஞர் கண்ணதாசன் உவமையை எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதைப் பார்ப்போம்.

'இளங்கன்று பயம் அறியாது' என்பதுபோல கவிஞர் தன் உவமானத்தை நயம்பட கூறுவதில் வல்லவர். 'மாங்கனி' காவியத்தில் அவர் அள்ளித்தெளித்த உவமைகளைக் காண்போம்.

வஞ்சி நாட்டிலே விழா நடக்கிறது. அரசன் அரியணை யில் வீற்றிருக்கிறார். விழாக்களில் பலவித நாட்டிய நடனங்களை நங்கையர்கள் ஆடுகின்றனர். வான வேடிக்கைகள், விண்ணை முட்டுகின்ற வேட்டுச் சத்தங்கள் பொன்னால் ஆன மலர்களை அழகுக்கான அரண்மனைகளில் வைத்திருக்கிறார்கள். இவற்றைக் கவிஞர் தன் உவமானத் தால்

"பொன் பூவில் மணமேது என்பார் — அன்று
போயிருந்தால் பொன்பூவும் மணத்தல் காண்பார்"

என்று, வீசிக்கொண்டிருக்கும் நறுமணப் புகைகளினால் பொன் மலரும் மணம் பெற்றது என்று கூறுகிறார்.

சேரன் அவையிலே மாங்கனி ஆட வேண்டும் என்று அரசன் உத்தரவு பிறப்பிக்கிறான். மாங்கனி ஆடுகிறாள். அவளுடைய ஆட்டத்தைக் கவிஞர் உவமானத்துடன்

"விரிக்காத தோகை மயில்! வண்டு வந்து
மடக்காத வெள்ளை மலர்! நிலவு கண்டு
சிரிக்காத அல்லி முகம்! செகத்தில் யாரும்
தீண்டாத இளமை நலம், பருவ ஞானம்."

என்று இதுவரையில் தன்தோகையை விரித்து ஆடாத மயில் இன்று ஆடுகிறது.

இதுவரையில் எந்த வண்டும் அந்த மலரில் அமர்ந்ததில்லை,
இதுவரையில் நிலவைக் கண்டு சிரிக்காத அல்லி மலர்

இதுவரையில் செகத்தில் அவனை யாரும் தீண்டாத
இளமை நலம்

என்று காட்டுகிறார். கவிஞர்.

காவியத்தின் நாயகன் அடலேறு தென்னரசியை மணம் முடி கிறான். அவற்றைக் கண்ட மாங்கனி உள்ளம் பதை பதைக்கிறாள். பின்பு மெல்ல நகர்கிறாள். அவற்றை கவிஞர் தன் உவமையோடு

"நூலுக்கு கால் முளைத்தாற்போலச் சென்றாள்"
என்கிறார்.

கவிஞர் கண்ணதாசனுக்கு காதல் என்றால் நாம் சொல்லித் தெரிய வேண்டாம்.

முலைப்பாலை முற்றாகக் குடித்துத் தீர்த்த குழந்தையென கவிஞருக்கு காதல் என்பது பிறபபினிலே ஊரிய அமுத ஊற்று. கவிஞரின் நினைப்பு எப்பொழுதும் காதலைப் பற்றியதாகத் தான் இருக்கும். அவர் எழுத்திலும், பேச்சிலும் காதல் ரசம் வழிந்தோடுவதைக் காணலாம்.

இப்படி இருக்கையில் தன் காப்பியத்தில் காதலைப்பற்றி எழுதாமல் இருப்பாரா என்ன !!

காப்பியத்தில் வீரர்கள் போருக்குப் புறப்பட்டுவிட்டார்கள் கூடவே ஆடல் பாடல் மகளிரை அழைத்துச் செல்கின்றார்கள். அதிலே மாங்கனியும் ஒருத்தி. வீரர்கள் இரவில் ஓர் இடத்தில் தங்குகிறார்கள். எல்லோரும் உறங்கிவிடுகின்றனர். ஆனால் மாங்கனிக்கும், அடலேறுக்கும் உறக்கம் வரவில்லை. இருவரும் தனியாக நிலவொளியில் சந்திக்கிறார்கள். உடலாலும், உள்ளத்தாலும் இன்பங்கொள்கின்றார்கள். மறுநாள் தோழி ஒருத்தி மாங்கனியைப் பார்த்து கேட்கிறாள்.

"சிவப்பெலாம் உதட்டைவிட்டுச்
சென்றதே ஐயோ! காதல்
துடிப்பினால் சிவப்பைத் தின்ற
துட்டனும் யாரோ? என்கிறாள்."

கவிஞர் இந்தப்பாட்டிலே கற்பனையின் உச்சிக்கே போய் விடுகிறார்.

பெண்களின் அழகுப் பொருட்களில் உதட்டுக்குப்பூசும் சிவப்புச் சாயம் ஒன்று. அந்தச் சாயத்தைப் பூசி தன்னை அழகுபடுத்தி இருந்தாள் மாங்கனி.

அடலேறு காதல் மோகத்தால் மாங்கனியின் உதட்டிற்கு முத்த மழையை பொழிந்தெடுத்தான். அதனால் மாங்கனியின் உதட்டுச் சாயம் அடலேறுவின் வாய்க்கு தாவிவிட்டது.

மறுநாள் காலையில் மாங்கனியின் தோழி கேட்கிறாள்;உன் உதட்டுச் சாயத்தைத் தின்றவன் எவனோ? என்று கேலி பேசுகிறாள்.

இங்கே கவிஞர் கண்ணதாசன் காதலின் மகத்துவம் எவ்வாறு இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துகிறார்.

இன்னுமோர் இடத்தில் கவிஞர் காதலைப்பற்றி கூறும்போது :

காப்பியத்தில் போரில் ஏற்பட்ட குழப்பத்தால் மாங்கனியைப் பிரிய நேரிடுகிறது. காப்பிய நாயகன் அடலேறுக்கு மாங்கனியின் நினைவு வர அவளைத் தேடி அலைந்தவாறு பாடுகின்றான்.

" தொட்டால் ஓர் சுவையும்
தொடப்போமுன் ஓர் சுவையும்
கிட்டத்து நின்றால்
கிளர்ச்சிதரும் ஓர் சுவையும் " என்கிறான்.

இவ்வாறு காதல் கீதங்களை தன் படைப்பான மாங்கனியல பாடவிட்டிருக்கிறார்.

சந்தத்தில் கவிதை எழுதுவதில் வல்லவர். கண்ணதாசனின் சினிமா பாடல்களை நாம் அடிக்கடி கேட்டிருப்போம். அவர் வார்த்தையை வைத்து சித்துவிளையாடுபவர். 'காய்' யை வைத்து ஒரு பாடலிலும் ' தேன் ' ஐ வைத்து ஒரு பாடலிலும் அவர் சந்தம் அமைத்ததை கேட்டிருக்கிறோம்.

மாங்கனி அரசவையில் ஆடுகின்றாள். ஆவள் ஆடலை பலரும் காண்கின்றனர். அப்போதுக் கவிஞர்.

" செந்தமிழ்த்தீம் என்றவளும் ஆடுகின்றாள்
செத்தொழிந்தேன் என்று சிலர் வாடுகின்றார்
தத்தனத்தான் என்றவளும் தாவுகின்றார்
தஞ்சமுற்றேன் என்று சிலர் மேவுகின்றார், "

தாசி குலத்தில் பிறந்த மாங்கனியின் மீது காப்பியத் தலைவன் காதல் கொண்டு அவளை அவள் வீட்டிலே போய்ப் பார்க்கிறான். அப்போது மாங்கனி அடலேறுவை காமுகன் என்று துரத்திவிடுகிறாள் அறியாதவளாக. பின்னர்தான் தெரிய வருகிறது அவன் படைத்தலைவன் என்று. அப்போது மாங்கனி மனம் வேதனை கொள்கிறாள். இந்தவேதனையை ஆற்றிக் கொள்ளவேண்டி தோழியுடன் பாட்டுப்பாடுகிறாள்.

“ தென்னவன் பிள்ளையடி — அவனோர்
சித்திரக்காரனடி
கன்னல் வனந்தேடி — அலைந்த
காரியக் காரனடி.

“ நல்ல மனந்தானோ ? இணைந்தால்
நாடி மனப்பானோ
சொன்ன உறுதியெலாம் — காற்றில்
தூவி விடுவானோ ?

“ பிள்ளைக் குணந்தாண்டி — பேச்சில்
பித்தம் குழைப்பாண்டி
வெள்ளை மனத்தாரை — வலையை
வீசிப் பிடிப்பாண்டி

என்று கவிஞர் சந்தக் கவிதை பாடியிருப்பதை நாம் காண்கிறோம்.

கவிஞர் கண்ணதாசன் மாங்கனி என்ற முத்தமிழ்க் காப்பியத்தைப் பயைத்துவிட்டார். காப்பியத்தை அவலச் சுவையுடன் முடித்துவிட்டார் என்று நமக்கு ஆதங்கமாக இருந்தாலும் உயிர் உள்ள காப்பியத்தை படைத்து விட்டார் என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

‘மாங்கனியை கவிஞர் சுவைத்தாரோ என்னமோ நாம் அவற்றைப் படித்து சுவைத்தால் கவிஞரே சுவைத்த மாதிரி தான்

சீன பிளம்-பிளாசம் ஊசிச் சிகிச்சை முறை
[The Chinese Plum-Blossom Neddle Therapy]

டாக்டர் ஐ. சிவசுப்பிரமணிய ஜெயசேகர்,
எம், பி. பி. எஸ்.,

ப்ளம்—பிளாசம் ஊசிச் சிகிச்சை முறை சீன மருத்துவக் கலாச்சாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு சிகிச்சை முறையாகும். பழமையான சீன மருத்துவ முறைகளான அக்கு பங்சர், அக்கு பிரஷ்ஷர் போன்றவை இன்று உலக அளவிலும் இந்தியாவிலும் சமீப காலமாக பிரபலமடைந்து வருகிறது. மற்ற சீன மருத்துவ முறைகளைப் போன்றே இப் பிளம்-பிளாசம் சிகிச்சை முறையும் சுமார் 2000 வருடங்களுக்குப் பழமையானதாகும். எனினும் பலவித நோய்களில் இச்சிகிச்சை முறை விரைவில் குணமளிப்பதாலும், சிகிச்சைமுறை எளிமையானதாலும் இம் முறை இன்றளவும் புகழ் பெற்றிருக்கிறது.

அக்கு பங்ச்சர் சிகிச்சை முறைக்கும் இந்த பிளம் பிளாசம் முறைக்கும் சில வேறுபாடுகள் உள்ளது. அக்கு பங்சர் முறையில் உடலின் மீது தேர்ந்தெடுக்கப்பட்ட புள்ளிகளில் நோய்களைப் பொறுத்து ஊசிகள் மேலாகவோ (Shallow) அல்லது ஆழமாகவோ (Deep) குத்தப்படும். ஆனால் பிளம் பிளாசம் ஊசிச் சிகிச்சை முறையில் பல ஊசிகளைக் கொண்டு தோலில் ஆழமில்லாமல் மேலாகவே குத்தப்படும் சிகிச்சை முறையாகும். (Shallow insertion with Multiple Needles) ஒற்றை ஊசிச் சிகிச்சை முறையில் சிகிச்சைக்கு உள்ளாகும் நபர் ஊசி செருகப்படும் பொழுது வலியை அனுபவிக்க நேரிடும். ஆனால் இச் சிகிச்சை முறையில் இவ் வேதனையிலிருந்து நோயாளிக்கு விடுதலை அளிக்க நுண்ணிய ஊசித் தொகுப்பும் மேலாகக் குத்தும் முறையும் பின்பற்றப்படுகிறது. நடைமுறையில் இவ்வகை ஊசித் தொகுப்பில் ஊசிகளின் எண்ணிக்கைகளைப் பொறுத்து பலவகையான பெயர்களில் இவை அழைக்கப்படுகிறது.

ஐந்து ஊசிகளைக் கொண்ட தொகுப்பிற்குத்தான் ப்ளம்-பிளாசம் ஊசித் தொகுப்பு என்று பெயர். ஏழு ஊசிகளைக் கொண்ட தொகுப்பிற்கு ஏழு நட்சத்திர ஊசி (Seven star needle) என்றும் பதினெட்டு ஊசிகளைக் கொண்ட தொகுப்பிற்கு ஆர்கட் ஊசி (Arcat needle) என்றும் பெயரிட்டு அழைக்கப்

படுகிறது. மேலும் இவை தோலில் மேலாக குத்தப்படுவதால் இதற்கு மேல்தோல் ஊசி (Cutaneous needle) என்றும், சற்றும் வலியற்ற முறையில் சிகிச்சை மேற்கொள்ளப் படுவதால் இதற்கு குழந்தைகள் ஊசி (Children needle) என்றும் அழைக்கப்படுகிறது.

அடிப்படைத் தத்துவம் :

உடலின் பல பாகங்களும் சில குறிப்பிட்ட கால்வாய்களால் (Channel) இணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய 12 கால்வாய்கள் உடலில் உள்ளதாக இம்மருத்துவமுறை கூறு கிறது. இவ்வகைக் கால்வாய்கள் மேலும் பல கிளைக் கால்வாய்கள் (Collaterals) மூலம் இணைக்கப்பட்டுள்ளன. கால்வாய்கள் ஒவ்வொன்றும் தோலின் ஒரு குறிப்பிட்ட பகுதி யுடன் தொடர்புடையதாக கணக்கிடப்படுகிறது. உடலில் ஏற்படும் பல வகையான நோய்கள் தோலில் ஏற்படும் நோய் தொற்றினாலே (Infection) உண்டாகிறது. எனவே நோயினால் உடலின் உள் பாகங்கள் பாதிக்கப்படும்பொழுது தோலின் குறிப்பிட்ட பகுதியும் பாதிக்கப்படும். இச்சிகிச்சை முறையில் நோயினால் உடலில் பாதிக்கப்பட்ட பாகத்துடன் தொடர்புள்ள தோல் பகுதி கண்டுபிடிக்கப்பட்டு ஊசிச் சிகிச்சை தரப் படுகிறது.

தோலுக்கும், உடல் உள் பாகங்களுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி உடற் கூறு நூல்களில் (Anatomy) பல விளக்கங்கள் உள்ளன. உடலின் உள் பாகங்களின் நரம்பு களும் தசை, மற்றும் தோலின் நரம்புகளும் தண்டு வடத்தின் ஒரே பகுதியில் (Same spinal segment) வந்து சேர்வது இதனை உறுதிப்படுத்துகிறது. எனவே தோலில் ஏற்படும் எந்த மாற்றமும் அது சம்மந்தப்பட்ட உள் பாகங்களில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிகிறது.

இந்தத் தோல் பகுதியைத் தூண்டுவதன் மூலம் தேவை யான நல்ல விளைவுகளை (Positive effect) ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். தோலில் ஊசிச் சிகிச்சை தரப்படும் பொழுது சிகிச்சையால் தூண்டப்பட்ட தோலினைச் சார்ந்த உள் பாகத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து அதன் வேலைகள் சீராகிறது.

சிகிச்சை முறை :

இச் சிகிச்சை முறை பல்வேறு வகையான நோய்களிலும் பயன்படுத்தப்படுகிறது. உடலில் உள் பாகங்களில் உண்டாகும் நோய்களுக்கு [Diseases of Internal organs], அறுவை சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கு [Surgical diseases] குழந்தைகள் நோய்களுக்கும் மற்றும் பெண்பால் நோய்களுக்கும் செய்யப் படுகிறது.

ஆயினும் இச்சிகிச்சை முறையின் வெற்றி நோயின் தன்மையைப் பொறுத்து மாறுபடுகிறது. சில வகை நோய்கள் முற்றிலும் குணமடைகிறது. சில வகை நோய்களில் நல்ல முன்னேற்றமும், சில சமயங்களில் நோயாளிக்கு கடுமையான நோய்குறிகளிலிருந்து விடுதலையும் கிடைக்கிறது. சில நேரங் களில் மற்ற வகை சிகிச்சை முறைகளுடன இணைத்தும் இவை செய்யப்படுகிறது.

இச்சிகிச்சையின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைவது நோய்க்குரிய தோல்பகுதியை சரியாக கண்டறிந்து தூண்டுவதே ஆகும்.

உதாரணமாக வயிற்று வலி, ஏப்பம், மலம் அடிக்கடி போதல், போன்ற அறிகுறிகள் உள்ள நோயாளிக்கு சிகிச்சை அளிக்க 5வது மார்பக முதுகெலும்பிலிருந்து [Thorasic Vertebra] 12வது மார்பக முதுகெலும்பு வரை உள்ள தோல் பகுதி தேர்ந்தெடுக்கப் படுகிறது. ஆயினும் கடுமையான வயிற்று வலியாக இருந்தால் மேற்சொன்ன பகுதியுடன், கீழ்தாடையின் வெளிப்பகுதியும், தொடையின் உள் பகுதியும் சேர்த்து தூண்டப்படுவதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறாக ஒவ்வொரு நோய்க்கும் நோயின் அறிகுறிகளுக் கும் தகுந்தவாறு தோல் பகுதியைத் தெரிந்தெடுத்து சிகிச்சை அளிக்கப்படவேண்டும்.

இச் சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் ஊசிகள் மிகவும் கவனமாக பாதுகாக்கப்படவேண்டும். ஊசியின் முனைகள் வளைந்து போகாதவாறும், துருப்பிடிக்காதவாறும் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் உபயோகப்படுத்தும் முன்னரும் ஊசிகளை 75% ஆல்ககாலில் அரை மணி நேரம் இட்டு பிறகு எடுத்து உபயோகிக்கவேண்டும். தோல் தொற்று (Dermatitis) உள்ளவர்களுக்கும், கல்லீரல் அழற்சி (Hepatitis) உள்ளவர்

களுக்கும் பயன்படுத்திய ஊசிகளை தனியாக எடுத்து வைக்க வேண்டும். அதனை மற்ற நோயாளிகளுக்கு பயன் படுத்தக் கூடாது.

முடிவுரை :

இச் சிகிச்சையின் சிறப்பம்சம் இதன் எளிமையும் நல்ல பயன் பாடுமேயாகும். இது செலவற்றதுடன் இதனை அனைவரும் எளிதில் கற்றுக் கொள்ளமுடியும். இதனால் (நோயாளியின் மருந்துச் செலவு குறைவதுடன், பின்விளைவுகள் side effects) கொண்ட மருந்து மாத்திரைகளிலிருந்துப் தப்பிக்க வாய்ப்பு உள்ளது.

இம்முறை சீனாவில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுவதுடன் கிராமப்புற அடிப்படை சுகாதார மருத்துவ மனைகள் அனைத்தி திலும் பரப்பப்பட்டுவருகிறது. இதனைச் செழுமைப்படுத்தும் விதத்தில் மின்சார ப்ளம்-பிளாச முறையும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

சீனாவைப்போலவே நமது நாட்டிலும் நிலவி வந்த பல நல்ல பழமையான மருத்துவமுறைகள் இன்று வழக்கொழிந்து வருவது வருந்தத்தக்கது. அவைகளின் பயன்பாடுகள் கண்டு பிடிக்கப்பட்டு, செழுமைப் படுத்தப்பட்டால் எத்தனையோ ஏழை மக்களுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஆலய இசைக் கருவிகள்

செல்வி இரா. மாதவி, பி ஏ., (இசை) எம். ஏ.,
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

பல வகையான இசைக் கருவிகளை உலகிற்கு வழங்குகின்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இசைக்கு மயங்காத உயிரினங்கள் இல்லை. தாவரங்களும் இசையைக் கேட்டுச் செழித்து வளரும் தன்மை உடையது. மன உணர்ச்சிகளை இன்பம், துன்பம் ஆகிய இரு நிலைகளிலும் வெளிப்படுத்தக் கூடிய ஆற்றலே இசையின் தனிச் சிறப்பாகும்.

இந்தியாவில் பயன்படுத்தப்படுகின்ற இசைக் கருவிகளைத் தோற் கருவிகள், நரம்புக் கருவிகள் (காற்று) குழற் கருவிகள், கஞ்சக் கருவிகள் என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் குறைந்த அளவு 500 வகைகள் உள்ளன. ஒவ்வொரு இசைக் கருவியும் அதற்கே உரித்தான தனிப்பட்ட பெயர், வடிவம் கலை நுணுக்கம், நாதம் முதலியவற்றைக் கொண்டு விளங்குகின்றன.

முற்காலத்தில் ஆதிவாசிகள் கற்களைக் குடைந்தும், அதன் மேற்புறத்தில் விலங்குகளின் தோலை இழுத்துக் கட்டியும் அவற்றை இசைக்கருவிகளாக உருவாக்கினர். இவைகளில் "வாத்ய ரயம்" எனப்படும் யாழ், சூழல், முழவு இவற்றைச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் இசைக் கருவிகளான யாழ், குழல், தண்ணுமை முதலியவற்றோடு ஒப்பிடுகின்றனர். இந்திய இசையின் உயிராகவும், ஆன்மாவாக வும், இருப்பவை கமகங்களே.

சம்பந்தருடன் நெருங்கிய நட்புரிமை கொண்ட திருநீலகண்ட யாழ்பாணர், சம்பந்தர் பதிகங்களை யாழில் வாசிப்பது வழக்கம். ஒருமுறை சம்பந்தர் "மாதர் மடப்பிரியும்" என்ற பதிகத்தைப் பாட அதனைத் திருநீலகண்ட யாழ்பாணர் யாழில் வாசிக்க முயன்று இயலாமல் போகவே யாழினை முறிக்க முற்பட்டார். அதனை சம்பந்தர் தடுத்து நிறுத்தி இயன்ற வரை வாசிக்கச் சொன்னார். அப்பதிகம் யாழ்முறிப்பண்ணில் அடாணா அமைந்துள்ளது. அதனை அவர் வாசிக்க இயலாமை தோன்ற "யாழ் முறியப்பண்" எனப்பட்டது... இப்பண் தற்காலத்

தில் நீலாம்பரி என்றழைக்கப்படுகின்றது. (௨) இந்திய சாஸ்திரிய இசையில் பல நுண்ணிய சுருதி வித்தியாசங்கள் இருப்பதால் சாவி அமைப்பை (Key Board) உடைய கருவிகள் இந்தியாவில் மறைந்ததற்கு மற்றொரு காரணமாகும்.

இந்திய இசைக்கருவிகளின் சிறப்புக் கூறுகள் யாதெனின் காற்றுக் கருவி தந்திக் கருவி ஆகியவற்றில் தந்தியை நிறுத்துவதற்கு விரல்களே பயன் படுத்தப்படுவதால், இக்கருவி களை மீட்டுவதற்கு (Key) சாவி போன்ற வேறு எந்த அமைப்பும் பயன்படுத்துவதில்லை எந்த இசைக் கருவியையும் வாசிப்பதற்கு அதற்கே உரித்தான தொழில் நுணுக்கம் உண்டு. தோல் கருவிகள் போன்றவற்றில் நுண்ணிய சுருதிக்காத் தேவையான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கிந்திய இசையை விடவும் இந்திய இசையில் கச்சேரி பேரிகை (மேளம்) சிறப்பான பங்கு வகிக்கிறது.

இத்தகைய ஆலய இசைக்கருவி பெருமைகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆலய இசைக் கருவிகளின் வளர்ச்சி :

இந்தியப் பண்பாட்டிற்கு பெருமை தேடித் தரும் இந்திய இசை மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே (முழுமையான உயர்ந்த உண்மைகளையும் தத்துவங்களையும்) கொண்டு அமைந்துள்ளது இந்திய இசை இலக்கண இலக்கியங்களில் லஷண, லஷ்யங்களில் மட்டும் சிறந்து விளங்காமல் சிறந்த வரலாற்றையும் உடைய ஒரு நுண் கலை ஆகும். இந்திய நுண்கலைகளான சிற்பம், ஓவியம், இசை நாட்டியம் இணைந்து போற்றி வளர்க்கப்பட்டன. பழமையான இந்தியா வில் பௌத்த சிற்பக்கலை, இந்து சிற்பக்கலை இவற்றில் நாட்டியம், ஓவியம் இசை முதலிய நற்கலைகள் யாவும் தெய்வ வழிபாட்டிற்கு அடிப்படையாகக் காணப்பட்டன.

சிற்பங்களின் மூலம் இசைக்கருவிகளின் வளர்ச்சி அதன் காலம் போன்றவற்றை ஓரளவிற்கு வரையறை செய்ய முடிகின்றது. இதனை நோக்குங்கால் இசைக் கருவிகளில் முதலில் தோல் கருவியும் அதன்பின் நரம்புக் கருவியும் தோன்றின. (குழல், யாழ், தண்ணுமை) என்ற உண்மை தெரிகிறது. இசைக் கருவிகளை உண்டாக்கும் போது மனிதனுக்கு உறுதுணையாக இருந்தது இயற்கையே.

சிந்து சமவெளி நாகரீகக் காலத்தில் தாளவாத்தியங்கள் செய்யும் முறையும், வாசிக்கும் முறையும் உருவாகினார்கள். சித்திர எழுத்து உருவங்கள் சிலவற்றை நோக்குங்கால் யாழில் முகத்தையும், வாரை என்னும் 100 தந்திகளை உடைய நரம்புக் கருவியையும், சொக்கரை என்னும் உலோக வாத்தியத்தையும் காணலாம்.

நம்நாட்டில் நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து இசையை இறைவழிபாட்டிற்கு ஏற்றதாகக் கொண்டுள்ளனர் என்பது தெரிகிறது. இறைவனடி சேர மார்க்கமாக இசை இருப்பதால் இந்திய சங்கீதத்திற்கு ''மார்க்க சங்கீதம்'' என்று பெயர். வேத இலக்கியங்களின்படி வீணை வாசித்துப் பாடுபவர்களை வீணாகயிக என்று அழைக்கப்பட்டனர்.

கம்பரது காவியத்தைப் போல் மகாபாரதத்திலும், இசை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பௌத்த இலக்கியங் களிலிருந்தும் கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சி களிலிருந்தும், இசையின் வளர்ச்சியை அறியமுடிகிறது. புத்தர் பிறந்த போது நிகழ்ந்த 32 மாபோதிய சங்கங்களுள் இசைக்கருவிகள் தாமே முழங்கியதும் ஒன்றாகும்.

காளிதாசரின் மேக சந்தேசத்தில் கார்காலத்தில் மேகங் களின் முழக்கத்தை மிருதங்கம், படகம், புட்கரம், முரசம், போன்ற தாள வாத்யங்களின் நாதத்துடன் ஒப்பிடுகின்றார்.

ஆலயங்களின் தெய்வ வழிபாட்டில் கீத, வாத்ய, நிருத்யஇ உபசாரங்கள் (6) சங்க காலத்தில் இருந்தே நிகழ்ந்து வந்தன என்பது தெளிவாகிறது. பரிபாடலின் 17-வது பாடலில் தீப ஆராதனைச்குப் பிறகு பாணர்கள் ஆலத்தி (இராக ஆலாபனை) செய்தனர். இதைத்தொடர்ந்து குழல், யாழ், முழவு, போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்பட்டன.

நாயன்மார்களுள் குறிப்பிடத்தக்கவர்களான அப்பர், சுந்தரர் சம்பந்தர், மாணிக்கவாசகரும் மேலும் 12 ஆழ்வார்களும் யாழிசைக்கு ஏற்பத் தெய்வத்தைப் பாடி சைவ வைணவ மதத்தைப் பாதுகாத்து மக்கள் மனத்தில் பக்தி உணர்ச்சியை ஏற்படுத்தினர்.

தேவாரப் பதிக வரிகளிலிருந்து தேவார பண் இசைக்கச் சீரிய யாழ் உபயோகப் படுத்தப்பட்டது என்பதை அறியலாம். சிவனின் நாட்டியத்திற்குப் பக்க வாத்யமாக மிடற்றுப்

பாடல்களோடு இசைக் கருவிகளும் பூககணங்களால் வாசிக்கப் பட்டன அவை குழல், முழவு, மொந்தை, ஏறு கோட்பாறை, உடுக்கை, ஜல்லரி, தாளம், பறை. மத்தளம், துடி, ஜில்லரி, படகம், தக்கை, சங்கம், குடமுழா ஆகும்.

ஆனாய நாயனார் மூங்கிலாலான வேய்ங்குழல் மூலம் இறைவனை வழிபட்டார். என்றும், அவர் குழல் வாசிக்கும் முறை வாசிக்கும் முறை பற்றியும் சேக்கிழார்! ஆனாய நாயனார் புராணத்தில் விளக்குகிறார்.

''எழுவிரலிடை இட்ட இன்னிசையை ஆனாய நாயனார் குழலில் முல்லைப்பண்'' என்ற திறத்தை வாசித்தார். இப்பண்ணில் தாரம், உழை ஆகிய ஸ்வரங்களைப் புகுத்திக் கோடிப்பாலையை வாசித்தார்.

கோயில்களில் தெய்வத்தின் முன்பாக இசை, நாட்டியம் முதலியவை ஆத்மார்த்தமாக நடத்தப்பட்டது. கலைநிகழ்ச்சி நடத்துபவர்களால் கலைஞர்களுக்கு நிலங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.. கோயில்களில் நாதசுவர குழுவினர் வாத்ய இசைச் சார்பில் வாசித்தனர். இதன் சரியான பெயர் நாகசுரம் என்றும், நாதசுரம் அல்ல என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது. குடுமியான்மலை, திருமயம் போன்ற இடங்களில் கல்வெட்டில் உள்ள இசைக்குறிப்புக்களும், அமராவதி, காஞ்சி முதலிய இடங்களில் இருக்கும் இசைக் கருவிகளின் சிற்பங்களும், மற்றும் பழமையான கோயில்கள், புத்த தூபிகள் முதலிய இடங்களில் உள்ள சிற்பங்களும் இந்தியாவில் இசைக்கலை பெற்றிருந்த உன்னத நிலையையும் பெருமையையும் காட்டும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

தென்னிந்தியக் கோயில்கள் செல்வச் செழிப்புடனோ, வறுமையாகவோ இருந்தாலும் பெரிய மேளம் வாசிக்கப்படுகிறது. கோயில்களில் நடக்கும் எல்லா விழாக்களிலும் நாகசுர இசைக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. இவை மட்டுமன்றிப், பல கோயில்கள் பாடகர்களையும், இசைக்கருவி வித்துவான்களையும், பஜனைக்குழுக்களையும் கொண்டு திகழ்கின்றன தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாரூர், திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களில் பஞ்சமுக வாத்தியம் வாசிக்கப் படுகிறது.

கோயில்களில் இறைவனை விமானத்தோடு தூக்குவது கடினமான வேலை எனவே பல மேளங்களும், நாகசுரங்களும்

ஒன்று கூடி ஓரிரு இசையை இசைக்கும் போது மல்லாரி இசைக்கு என்றுமில்லாத வீர உயர்வு பெருகுகிறது. சுவாமி புறப்பாட்டிற்கு வரும்போது மல்லாரி பாடுவார்கள். மல்லாரியோடு பஞ்சரத்னம் என்னும் தவிலும் வாசிக்கலாம், இந்த இசையானது நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் சிறப்பான இசைக்கலைப் பயிற்சியை அளிக்க உதவுகிறது. இதற்கே உரித்தான கம்பீர மான நாதத்தால் அனைவரையும் விரும்பி கேட்கச் செய்யும் ஆற்றலைப் பெற்றிருக்கிறது.

மனிதனால் அறியப்பட்ட பழமையான காற்று, வாத்யம், சங்கு. இது மிகவும் புனிதமாகக் கருதப்படுகிறது. கோயில் களிலும், மத சம்பந்தமான சடங்குகளிலும், ஊர்வலங்களிலும் சங்கு பயன்படுத்தப்படுகிறது. மகா பாரதத்தில் பாண்டவர் களுக்கும் கிருஷ்ணனுக்கும் தனித்தனியாகச் சங்குகள் இருந்தன. நாகஸ்ரா என்ற இசைக்கருவி ஊர்வலத்தில் தெய்வத்திற்குப் பின்னால் இரண்டு சக்கர வண்டி ஒன்றில் வைக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படும்.

தற்காலத்தில் சர்வ வாத்தியம் ஒரு சில கோயில்களிலேயே வாசிக்கப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில்லுள்ள செய்தூர் ஆலயத்தில் ஆண்டுதோறும் நிகழும் பிரம்மோத்சவ விழாவில் சர்வவாத்யம் வாசிக்கப்படும். இவ்வாத்யத்திய (19) நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் கீதம், வாத்தியம், நிருத்யம், கவிதை மூலமாக இறைவனுக்கு அஞ்சலி செலுத்துவது ஆகும்.

புல்லாங்குழல் காற்று வாத்தியங்களுள் முக்கியமான கருவி. இது இந்திய இசையின் உன்னதமான இடத்தை வகிக்கிறது. கிருஷ்ண பரமாத்மாவின் கையில் குழல் இணைந்துள்ளது. ஆகவே இது தெய்வீகத் தன்மை வாய்ந்தது.

நாகசுரம் ஆலயங்களில் நடைபெறும் சின்ன மேளம் எனப்படும். நாட்டிய இசைக்குப் பக்க வாத்தியமாக இது பயன் படுத்தப்படும். தென்னிந்திய கோயில்களில் முக்கிய கால பூஜைக்குப் பக்க வாத்தியமாகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் சில (23) ஆலயங்களில் தம்புரா வயலின் முதலியன பயன்படுத்தப்படுகிறது. திருவரங்கம் ஆலயத்தில் கௌசிக ஏகாதசி வைகுண்டஏகாதசி போன்ற நாட்களில் இடக்கை என்ற வாத்யத்தை ஒத்திருக்கும் ஒரு மேளம் வாசிக்கப்படும். கேரள ஆலயத்தில் பஞ்சமுக வாத்யம், இடக்கை, திமிலை

செண்டா செங்கலா, கொம்பு முதலிய ஐந்து கருவிகளையும் உள்ளடக்கி இருக்கும் உடுக்கை பம்பை கைச்சிலம்பு முதலியன இராம ஆலயங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

முடிவுரை :

பல நூற்றாண்டுகளாக இந்தியக் கோயில்களில் வழிபாட்டிற்காக மட்டுமன்றிக் கலைகளைக் கற்பிக்கும் இடமாகவும் திகழ்ந்தன. இசையொலியின் பல நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கும், இசையை வளர்த்து இசையின் அழகைத் துய்ப்பதற்கும் சிறப்பாக மொழி கலவாத் தனியிசையின் மேன்மை உயர்வதற்கும் இசைக் கருவிகள் பயன்படுகின்றன.

பெரும்பாலான கோயில்களில் பழைய வாத்தியக் கருவிகள் மறைந்து வருகின்றன. தற்போது சில குறிப்பிட்ட கோயில்களில் தான் பரம்பரையாக வாசிக்கப்படும் கருவிகள் வாசிக்கப்படு கின்றன.

ஆலயங்களில் தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப் பாடல்கள் இசைப்பது குறைக்கப்பட்டு வருகிறது. நாகரீக முன்னேற்றத்தினால் இனிவரும் காலங்களில் இவை வழக்கி லிருந்து மறைய வாய்ப்புகள் இருக்கின்றன. எளிய வாழ்க்கை நடத்தும் ஒருவனுக்கு ஆலயங்களில் அளித்து வந்த இசை விருந்து மிகவும் குறைந்து விட்டது.

இறையும், இசையும் பிரிக்கமுடியாத ஒன்று இறைவனை அடைய சிறந்த மார்க்கமாக இசை பழங்காலந்தொட்டுப் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. மறைந்துவரும் ஆலய இசையை இசைக்கருவிகளைப் பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

பழந்தமிழர் வழிபாடு

புலவர் க. மா. வீரணன், எம். ஏ., பி.லிட்.,
மணல்மேடு,
உசிலம்பட்டி - 626 532.
மதுரை மாவட்டம்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்!
ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலி காள்!

இவை தமிழகத்தில் சமயப் பூசல்கள் மலிந்த காலத்தில் ஒலித்த குரல்கள். ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியரே ஆன்றோர் நெறிப்படி ஐவகை நிலங்களுக்கும் ஐந்து கடவுளரை அறிமுகப்படுத்தினார். புவியியல் நிலை, காலநிலை இயல் ஆகிய இவ்விரண்டின் அடிப்படையில் நிலத்தையும் பொழுதையும் முதற் பொருள் என்றார். ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, மனப்போக்கு, பண்பாடு ஆகியவை ஒரே தரத்தனவாய் அமைதல் இயலாது. பல்வேறு வடிவிலும், பெயரிலும் கடவுளர் மக்கள் கருத்தில் இடம் பெற்றனர். இக்கொள்கை அகிலமனைத்திற்கும் பொருந்தும். இங்கு இயற்கையோடு இயைந்து வாழ்வு நடாத்திய பழந்தமிழரது கருத்தில் நிறைந்து காட்சியிற் பொலிந்து விளங்கிய கடவுளர் குறித்தும், அக் கடவுளர்க்கு இயற்றிய வழிபாடு குறித்தும் ஆராய்வோம்.

முருகன் :

பெரியமலையில் மிக உயர்ந்த இடத்தே உறைகின்ற முருகனை முதலில் வாழ்த்துவோம்.

"பிறங்குமலை மீமிசைக் கடவுள் வாழ்த்தி" வணங்குவோம் எனக் கபிலர் கூறுகிறார். காந்தள் மலர் போன்ற கைகளால் வெறியாடு மகளிரோடு சேர்த்தும் முருகனை வழிபாடு செய்யலாம்.

"காந்தளந் துடுப்பிற் கவிகுலையன்ன
செறிதோடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரோடு செறிய"

எனப் புறநானூறு கூறுகிறது. சிறந்த ஓவியன் வரைந்த முருகன் படத்திலும் தெய்வத்தன்மை இருப்பதால், அவ்வழிபாடும் இறைவனுக்கு விருப்பமான ஒன்றேயாகும் என்பதை,

" வல்லோன் னறஇய வரிப்புனை பாவை
முருகியன்றன்ன வுருனினையாகி " எனக் கூறப்படுகிறது.

கடம்பமலர் சூடிய முருகனை' குறிஞ்சி மலர் சூடி வழிபாடு செய்வதை,

" கார்மலர்க் குறிஞ்சி சூடி கடம்பின் சீர்மிகு நெடுவேட் பேணி" என்பதாலும், கடலிலே சென்று சூரனைக் கொன்ற முருகனைப் பெற்றவளாகிய இறைவி பேய்களோடு துணங்கைக் கூத்தாடும் காட்சியைப் பெரும்பாணாற்றுப்படை பெரிதும் புகழ்ந்துரைக்கிறது.

" வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்கு நொடித்தாங்கு "

என்பதே அக்காட்சியாகும்.

கடம்பமரத்தில் முருகனின் தெய்வத்தன்மை உண்டு என்பதை ' கடம்பமர் நெடுவேள் ' என்பதால் அறியலாம்.

சோழன் கரிகாலனின் சீற்றம் முருகனின் சீற்றத்தை ஒத்தது என்பதை ' முருகன் சீற்றத்து உருகெழு குரிசில் எனப் பொருநர் ஆற்றுப்படை கூறுகிறது.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியைப் பாண்டரங்கண்ணனர் ' முருகன் சீற்றத்து உருகெழு குரிசில் என இதே தொடரால் வாழ்த்திப் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் இத்தொடர் அகம் 158ஆம் பாடலிலும் எடுத்தாளப்பட்டுள்ளது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும், அவன் சுற்றத்தையும் வாழ்த்தும் போது,

" சூர்நவை முருகன் சுற்றத்தன்ன நின்
கூர் நல்லம்பிற் கொடுவிற் கூழியர் " (புறம் 23)

எனக் கல்லாடனார் முருகன் வீரத்தை உவமையாக்கிக் காட்டுகிறார். முருகன் எழுந்தருளியுள்ள இரண்டாம் படைவீடான திருச் செந்தில் " வெண்டலைப் புணரியலைக்குஞ் செந்தில் நெடுவேணிலைஇய காமர் வியன்றுறை " என புறநானூற்றில் வாழ்த்தப்பட்டுள்ளது.

தெய்வம் மனித உடலில் எழுந்தருளி ஆவேசங் கொண்டு ஆடுவதை இன்றும் காண்கிறோம். அன்று ஒரு புலைத்தி முருகனை எண்ணி ஆவேசத்துடன் ஆடியதை, ' முருகு மெய்ப்பட்ட புலைத்தி போல " எனப் பெரும்பதனார் பாடுகிறார்

" குறமகள் முருகியம் நிறுத்து முரணினர் உட்க " என்பதால், கடவுளை மறுப்போரும் அந்த ஆவேசத்தைக் கண்டு துஞ்சினராம். மேலும், பூப்புத் தோன்றக் கண்ட மகளிர் முருகன் கோட்டத்தில் உள்ள புழங்கும் கலங்களைத் தொடாது விலகி இருக்க வேண்டும் என்பது பண்டைய மரபாகும். இதை,

" அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொடா மகளிர் "

எனப் புறநானூறு கூறுகிறது. இவ்வாறு பாடியவர் பொன்முடியார் என்றும் பெண்பாற் புலவர் என்பது குறிப்பிடத் தக்கது.

" பல்கொடி மஞ்ஞை வெல்கொடி யுயரிய
ஓடிய விழவி னெடியோன் " என அகநானூறும்

" மனிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடிப்
பிணி முகமூர்ந்த வெல்போ ரிறைவ " எனப் பரிபாடலும்,

கூறுவதிலிருந்து சங்க காலத்தில் முருகனுக்கிருந்த அளவிடற்கரிய செல்வாக்கு விளங்குகிறது. எனவே முருகவழிபாடு மிகப் பழமையானது என்பதில் ஐயமில்லை.

" பெரியோர் எத்தும் பெரும் பெயர் இயவுள்,
அரும்பெறன் மரபிற்பெரும் பெயர் முருக ' இவை தமிழ் மந்திரங்களாகும்.

சிவன் :

சிவபெருமான் ஆலமர் செல்வன் எனப் போற்றப்படுகிறார். ' கடவுளாலத்து தடவுச் சினைப் பல்பழம் ' என்னும் புறநானூற்றுச் செய்யுலால் அறியலாம். இவர் மேருமலையை வில்லாகவும், பாம்பை நாணாகவும் கொண்டு, மூன்று அசுரர்களின் கோட்டைகளை அழித்து தேவர்களுக்கு வெற்றி தேடித் தந்தார். நெற்றிக்கண் கொண்ட நீலகண்டர் இவரே யாவார்.

" ஓங்கு மலைப்பெருவிற் ஞான் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிய

பெரு விற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் மாமர் சென்னிப்
பிறை நுதல் விளங்கு மொரு கண் ''

இதுவே சிவபிரான் முப்புரமெரித்த வரலாறாகும்

நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் திசைகளையும், படைத்து, மழுஉம்படையைக் கையிலேந்திய சிவபெருமானை தலைமைக் கடவுளாக வழிபட்டு வந்தனர். பழந்தமிழ்ச் சான்றோர் என்பதனை

" நீரு நிலனுந் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துடனியற்றிய
மழுவா னெடியோன் றலைவனாக,

என்பதால் அறிகிறோம். நவிரம் என்னும் மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை காரி உண்டிக் கடவுள் எனப் போற்றினர்

" நீரகம் பணிக்கு மஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிர மேஎ யுறையும்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும்

நவிரம் என்னும் மலை இக்காலத்தில் திரிசூலகிரி என்றும், பருவதமலை என்றும் வழங்கப்படுகிறது. இதில் காரி உண்டிக் கடவுள் திருக்கோயில் இருக்கின்றது. இப்போது இவரை காளகண்டேசுவரர் என வழங்குகின்றனர். இம்மலை திருவண்ணாமலைக்கு வடமேற்கில் உள்ளது.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்தும்போது, 'முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே' (புறம்) நினது வெண்கொற்றக்குடை மூன்று நயனங்களையுடைய செல்வரது கோயிலை வலம் வருக என காரிகிழார் கூறுகிறார். சிவபிரான் முடியில் அணிந்துள்ள பிறையைத் தொழுவது பண்டையத் தமிழரின் மிகப் பழைய வழிபாடு என்பதை,

' ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை ' என அகநானூறு கூறுகிறது.

முழு நிலவைத் தொழுவது மரபன்று. எனினும் அது திருமாவளவன் வெண்கொற்றக்குடை போல் இருப்பதால் வழிபடலாம். இதையே

"உச்சிநின்ற உவவு மதி கண்டு
தொழுனெ மல்லமோ

மாலைவெண் குடை யொக்குமோ லெனவே' என மருத்துவன் தாமோதரனார் பாடுகிறார்.

நெல்லிக்கனி பெற்ற ஔவையார் சிவபெருமானைப் போல நிலை பெற்று வாழுமாறு,

"பால்புனர பிறைநுதற் பொழிந்த சென்னி
நீலமணி மிடற் றொருவன் போல"

மன்னுக பெருமநீயே என அதிகமான் வாழ்த்திப் பாடுகிறார். சாதற்குக் காரணமாக நஞ்சுண்டும் நிலை பெற்றிருந்தாற் போல நீயும் சாவாதிருத்தல் வேண்டும் என்பது கருத்தாகும்.

கடையேழு வள்ளல்களில் ஒருவன் ஆய். நாகர்கள் ஒரு அரிய ஆடையை நெய்து அவனுக்கு அளித்தனர். ஆய் அதை அலமர் செல்வனுக்கு வழங்கினான்.

"நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்

என சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

பிற்காலத்தில் புறச் சமயத்தார் தமிழகத்தில் புகுந்தனர். சிவபெருமானால் அருளப்பட்ட நான்கு வேத நெறிகளை மறுத்தனர். அவர்கள் பரப்பிய நெறி உண்மை போல் தோன்றும் பொய் நெறியாகும். இதனை அறியாத பாமர மக்களுக்கு வேத நெறியின் மேண்மையை உணர்த்தினர்.

"நன்றாய்ந்த நீண்மிர் சடை
முழு முதல்வன் வாய் போகா
தொன்று புரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொரு முதுநூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோரது மேய் கொள்இ

மூவேழ் துறையு முட்டின்று போகிய
உரைசால் சிறப்பி னுரவோர் மருக '' எனவரும்

புறநானூற்றுப் பாடலால் மேற்கண்ட வரலாற்றை அறியலாம்

திருமால் :

முல்லைநிலக் கடவுளான திருமால் வலம்புரிச் சங்குடன் சக்கரத்தையும் ஏந்தியவராய் திருமகளைத் தம் நெஞ்சில் கொண்டு விளக்குகிறார். இச்செய்தி

'' நனந்தலை யுலகம் வளைஇ நேமியோடு
வலம்புரி பொறித்த மாதாங் தடக்கை
நீர் செலநிமிர்ந்த மாஅல் ''

என முல்லைப் பாட்டின் முதலடிலேயே வாழ்த்தி, நம் நூலைத் தொங்குகிறார். இத்திருமால் திருவெஃகாவணையில் பள்ளி கொண்டுள்ளார் இதனை,

'' நீனிற வுருவி னெடியோ கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் போகுட்டி காண்வரத் தோன்றி —
அவ்வயின் அருந்திறல் கடவுள் வாழ்த்தி

எனப் புலவரால் போற்றப்படுகிறார். நான்கு முகங்களையுடைய திருமாலின் திருவுந்தித் தாமரையில் பல இதழ்கள் அழகுபட விளங்குகின்றன. பிரமதேவர் செய்த வேள்வியை அழிக்க வந்த வேகவதி ஆற்றைத் தடுத்தற் பொருட்டுத் திருமால் பள்ளி கொண்டார். பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் எனப்பலராலும் போற்றப்படுகிறார். இவ்வரலாறே மேற்கண்ட பாடலின் பொருளாக அமைந்துள்ளது.

பழந்தமிழ் மன்னர் பலர் திருமால் மரபில் தோன்றியதாக கூறப்படுகிறது. சோழன் தொண்டமான் இளந்திரையனை,

'' முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்

திரைதரு மரபி னுரவோன் '' எனப் போற்றப்படுகிறான். அசுரர்களை வென்ற மாயோன் பிறந்த நாளான ஓணம் பண்டிகையைந் தமிழர் உவப்புடன் கொண்டாடினர், என்பதை

'' கணங்கொளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாள் '

என மதுரைக்காஞ்சியிலிருந்து அறியலாம்,

தமிழரசர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்த காலம் ஒன்றில்லை. எவரேனும் இரு அரசர்களை ஓரிடத்தில் காண நேர்ந்தால் அது மிக வியப்பிற்குரிய காட்சியாகும். இக்காட்சி,

“ பானிற வுருவிற் பனைக் கொடியோனும்,
நீனிற வுருவி னேமியோனுமென்
றிரு பெருந்தெய்வமும் உடன் நின்றாங்கு ”

என விளக்கப்படுகிறது பால் போலும் நிறத்தையுடைய பனைக்கொடியோனும், நீலநிறத் திருமேனியை உடைய ஆழியை உடையோனும் ஆகிய இருவரும் ஒருங்கிருந்தாற் போல இருந்தது என்பது புலவருக்கு வியப்பை ஊட்டக் கூடிய காட்சியாக உள்ளது.

இனி வடமொழி வாணர்களின் புராண இதிகாசக் கருத்துக்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளதைக் காண்போம். அசுரர்கள் ஆதவனைக் கடலின் அடியில் கொண்டொளித்தனர். ஞாலம் இருண்டது. இத்துயர் நீக்கத் திருமால் சென்று ஞாயிற்றை எடுத்து வந்து உலகிற்களித்தார்

“ அணங்குடை யவுணர் கணங் கொண் டொளித் தெனச்
சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா
திருள் கண் கெடுத்த பருதி ஞாலத்
திடும்பை கொள் பருவர றீரக் கடுந்திறல்
அஞ்சன வுருவன் றந்து நிறுத்தாங்கு ” என்ற அடிகளால்

மேற்கண்ட செய்தி விளங்குகிறது

நக்கீரர் :

சங்கப் புலவர்களில் நக்கீரர் கடவுள் கொள்கைகளில் பெரிதும் ஈடுபாடு உடையவர். முதல் தமிழ் வழிபாட்டு நூலாகிய முருகாற்றுப்படை பாடியவரும் இவரேயாவர். நெடுநல் வாடையில் பாண்டியன் அரண்மனையைப் பாட்டோவியமாகத் தீட்டியிருக்கும் கீரர்,

‘ கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து
ஐயவி யப்பிய நெடியொடு வேழஞ் சென்று புகல்
குன்று குயின்றன்ன வோங்குநிலை வாயில்
திருநிலை பெற்ற தீதுசீர் சிறப்பு ’ எனப் பாடுகிறார்.

இரண்டு யானைகளின் இடையே திருமகள் வீற்றிருக்கும் காட்சியை இன்றும் கோயில்களில் காணலாம். வாயிற் கதவில்

தெய்வம் வாழும். எனவே அதற்கு நெய் பூசுவது மரபாகும். இதே காட்சி கலித்தொகையில்,

‘ வரிநுத லெழில் வேழம் பூநீர் மேற் சொரிதரப்
புரி நெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திரு நயந்திருந் தன்ன’ — எனச்குறிக்கப்படுகிறது.

வாயில் நிலையில் தெய்வம் உறைவதால் அதற்கு நெய் அணிவித்து வெண்சிறு கடுகு அப்புவதை, ‘ ஐயவி அப்பிய நெய் அணி நெடுநிலை ’ எனச் சிறப்பிக்கப்படுகிறது.

சிற்ப நூற்கலை உணர்ந்த தச்சர், நேரிதாக நூலை நேராகப் பிடித்து நான்கு திசைகளையும் முதலில் குறித்துக் கொள்ள வேண்டும். அந்நான்கு திசைகளில் உள்ள தெய்வங்களையும் அப்போது வணங்கவேண்டும். இதை,

‘ நூலறி புலவர் நுண்ணுதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கி ’ எனக் கூறுகிறார்.

இந்நாற்திசைத் தெய்வங்களை முருகாற்றுப் படையிலும் கூறுகிறார்.

‘ நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்தம் ஒன்றுபுரி கொள்கை !

நான்கு தெய்வங்கள் எவை என்பதை, அவர் இங்கு விளக்க வில்லை. எனினும், புறநானூற்றில் இதே நக்கீரர் விளக்குகிறார்.

“ ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையுமேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக் கொடியோனும்
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும்
மணி மயிலுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண் செய்யோனுமென
ஞாலங் காக்கு கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வர் ”

இந்த உலகத்தைக் காக்கும் நான்கு கடவுளர்களாகச் சிவன், பலதேவன், திருமால் மற்றும் முருகன் ஆகியோரையே குறிப்பிடுகிறார் என்பதை மேற்கண்ட செய்யுள் செப்புகிறது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு

இரா. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., எம்.ஃபில்.
முதுநிலை விரிவுரையாளர்,
த. உ. க. கலைக்கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

" புயம் கம் அசை : புயம் — தோள்கள்
கம் — தலை : சிரசு. தோள்களில் பிரம விஷ்ணுக்களின்
தலைமாலை கிடந்து அசையும்படி எனினுமாம் " 39

என்று த. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை குறிப்புரையெழுதுகின்றார்.

சிவபெருமான், ஆமையோட்டைப் (கூர்ம அவதாரம்) பதக்கமென அணிந்துகொண்டார்; பன்றிக்கொம்பை (வராக அவதாரம்) வெண்டலை மாலையில் பிணைத்து மார்பில் அணிந்துகொண்டார் எனவரும் இப்புராணச்செய்தியை,

" ஆமையி னோடொண்
வராகத்தின் கோடு மகலுரத்தில் " 40

என்று நூலாசிரியர் நுவல்கின்றார்.

திருமால் தன் கண்ணைச் சிவபெருமான் திருவடியில் வைத்து அருச்சித்து வழிபட்டார். அதற்காகச் சிவபெருமான் சக்கராயுதம் நல்கியருளினார் எனும் செய்தியைத்

" திரியுரன் விழிபத மேறும்பொ தொர்வரு
திகிரியெ னதுபிர சாதித் தமர்ந்தன " 41

" ... தாள்
விழியேற்ற தென்மருதா " 42

என்கிறார் நூலாசிரியர்.

" தாள்விழி ஏற்ற — திருவடிகளில் திருமாலின்
தாமரைமலர் போலும் கண்களை ஏற்றுக்
கொண்டருளிய; என்றது திருவீழிமிழலையில் திருமால்
கண்ணிழந்து பூசித்த வரலாறு கருதி " 43

என்பர் த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

இடபவாகனம் :

" விஷ்ணுவும் ஒரு சமயம் இடபமாகிக் கயிலாய பதிக்கு
வாகனமானார் என்பது வரலாறு " 44

இக்கருத்தினைத்

" திருமால் வாகனமாக்
கருத்ததனிற் கொண்டதென்ன " 45

என்று நூலாசிரியர் வியப்புறக் கூறுகின்றார்.

பிரமனைப்பற்றியவை :

" பிரமன் கர்வித்த காலத்துப் பயிரவரை
ஏவி அவனது நடுத்தலையைக் கிள்ளி
யெறிந்து அவன் வேண்டுகோளால்
கபாலத்தைக் கைப்பற்றியவர் " 46

எனுஞ்செய்தியைத்

" தாவில் கையய னாரக்க பாலமே " 47
(தாவில் கைஅயனார் அக்க பாலமே)

" திறன்மறை யனுதின மோதெண்க ணானெழில்
திகழ்நடு முடிபநி யோர்பைப் பொருந்தின " 48

(எண்கணான் — பிரமன்)

என்கிறார் நூலாசிரியர்.

சிவனின் தீப்பிழம்பின் தன்மைகாணத் திருமால் பன்றி வடிவமெடுத்துத் திருவடியைக் காண முயன்றார். நான்முகன் அன்னவடிமெடுத்துத் திருமுடியைக் காணச்சென்றார். இருவரும் தோற்றனர்.

இச்செய்தியைப்

" பிறங்குமா லயன்முனங் காணொணா மருதப்
பிரானைநாம் காண்பிப்பமே " 49

" கோமேவுங் கொம்புறுகோ லங்கொம்பி
லாக்கோலக் கோலந் தாங்கிப்
பூமேவு மடிமுடிதேடிக் காணாப்
பொருண்மருதூர்ப் பொருளை " 50

" ஈரிரு முகன்மாற் கெட்டாச் சோதிய " 51

" கைதையைச் சாத்தார் போலும் "[52]

என்று நூலாசிரியர் நவில்கின்றார். இப்பதியில் சிவபெருமானைப் பரம்பொருள் என்றும் ஒளிவடிவினன் என்றும் குறிப்பிடுகின்றார். பிரமனின் தாழம்பூவைச் சிவபெருமான் ஏற்கவில்லை யென்பதனையும் கூறுகின்றார்.

> " பக்தியின் மூலமாக மக்களின் கவனத்தைச் சைவத்தின்பால் ஈர்க்க வேண்டும் எனக்கருதிய நாயன்மார்கள் சிவபெருமானின் திருவுருவத்தையும் திருவிளையாடல்களையும் தமிழ் மக்களிடம் பிரபலப் படுத்தவேண்டும் எனக்கருதினார்கள் "[53]

இவ்வாறே நூலாசிரியரும் திருவிடைமருதூர்க் கலம்பகத்தில் சிவனின் திருவுருவத்தையும் திருவிளையாடல்களையும் போற்று கின்றார்; சைவசமயத்தில் வளர்ச்சியில் உறுதிகொண்ட நெஞ்சினராய் விளங்குகின்றார்.

நாயன்மார்கள் சிவபெருமானின் உயர்வைப் போற்றிய வாறே திருவிடைமருதூர்க் கலம்பகத்திலும் ஆசிரியர் போற்று கின்றார்.

திரிபுரமெரித்தல் :

> "திரிபுராதிகள் பொன், வெள்ளி, இரும்புக்கோட்டை களைச்செய்வித்து அக்கோட்டைகளுடன் பறந்து தேவர்களை வருத்தி வந்தனர். இதனால் தேவர்கள் சிவமூர்த்தியை வேண்ட அவர்களில் மூவர் பிழைக்க மற்றவர்களை நீறாக்கித் திரிபுராரி மூர்த்தித் திருநாமமடைந்தவர் "[54]

சிவபெருமான் முப்புரங்களுடன் போருக்கு ஆயத்தமாகிறார். தேவர்கள் சிவபெருமானின் தேராக மாறுகிறார்கள். வேதங்கள் தேரை இழுக்கும் குதிரைகளாகின்றன. மேரு சிவனின் வில்லாக மாறுகிறது. அக்னி, விஷ்ணு, வாயு சிவனின் அம்புகளாகின்றனர். பிரம்மா சிவனுக்குத் தேரோட்டியாகிறார். சிவன் தேரின் மீது ஏறி முப்புரங்களைப் பார்த்துச் சிரித்து ஓர் அம்புவிடுகிறார். முப்புரங்களும் சாம்பலாகின்றன. அம்பின் செலவு பெரும் ஒலியை எழுப்புகிறது. சிவன் இத்தருணத்தில் அர்த்தநாரி வடிவம் எடுக்கிறார்.[55]

சிவபெருமான் முப்புரமெரித்த திருவிளையாடலை,

" வாழ்த்துறுமெய் மிக்கநதி
வயங்குமறைப் பரியிருக்கக்

காழ்த்திருமால் வாகனமாக்
 கருத்தனிற் கொண்டதென்ன " [56]

" தடமலை வில்லார் போலும் " [57]

" இஞ்சி யெரித்தானும் " [58]

" வரமூன்று மமரரெலா
 மயங்காது நிலைபெறவப்
புரமூன்றும் பொடியாகப்
 புன்னகையா லெரித்தனையே " [59]

என்று நூலாசிரியர் தெளிவுறக் குறிப்பிடுகின்றார். திரிபுரமெரித்த திருவிளையாடற் செய்தியின் வாயிலாகப் பரம்பொருளின் பேராற்றலையும் பெருநிலையையும் அறியலாம்.

கயாசுரனைழியத்தல் :

" யானை உருக்கொண்டு செருக்கடைந்து தேவர்களை வருத்திப் பின்பு தம்மை எதிர்க்க வந்து, தம்மையடுத்து விழுங்கிய கயாசுரன் உடலைப் பிளந்து வெளிவந்து அவன் தோலையுரித்துப் போர்த்துக் கஜாரிமூர்த்தியெனத் திருநாமம் பெற்றவர் சிவபெருமான் " [60]

இக்கயாசுரனையழித்த செய்தியை,

" கடமழை பொழிதரு கரியின தடல்கெட
உடையென வணிதரு முயரொரு வடிவினை " [61]

" கதமொடு பொருதிடநேர்கின்ற மரவுரி
கணமதி லணிபெறவாகத் தணிந்தன " [62]

" விறலிப முரித்தார்போலும் " [63]

என்ற பகுதிகள் சுட்டும். சிவபரம்பொருளின் மாவீரத்திற்கு இப்பகுதி சான்றாம்.

காமாரி வடிவம் :

"மன்மதன் தேவர்களால் தூண்டப்பட்டுச்சிவனின் தவத்தைக் கலைக்க முயன்றான். வசந்த காலத்தின் துணைகொண்டு தன் மலர் அம்புகளால் சிவனின் தவத்தைக் கலைத்துப் பார்வதியுடன் இணைக்க அவன் விரும்பினான். சிவபெருமான் மன்மதனை

அவனுடைய தந்தையாகிய விஷ்ணுவின் முன் தன் நெற்றிக் கண்ணால் பொசுக்கினார். காதற்கடவுள் சாம்பலானான் " 64

இப்புராணச் செய்தியை ஓரடியில்,

" மாரனை வென்றானும் " 65

என்று சுருக்கமாக நூலாசிரியர் கூறுகின்றார். இறைவன் இழிந்த காமத்திற்கு அப்பாற்பட்டவன் என்பதை இஃதுணர்த்தும்.

தக்கயாகச் செய்தி:

தக்க யாகத்தில், வீரபத்திரக் கடவுளின் திருவடியால் நிலவு தேய்க்கப்பட்ட செய்தி,

" மறக்குமதி வெண்மதியே வண்மருதீ சன்றான்
சிறக்க வுடன்முன் நீ தேய்ந்தாய் " 66

என்று தலைவி நினைவைப் பழித்துக் கூறுவதாக இப்பாடலடிகள் அமைந்திருக்கின்றன, இப்பகுதியில் தக்கயாக நிகழ்ச்சியைக் குறிப்பாகச் சுட்டுகிறார்.

நஞ்சுண்டது:

... தேவர்கள் மந்தார மலையை மத்தாக்கி, வாசுகியை மத்துக் கயிறாக்கினார்கள். அதுசமயம் பெரும் விஷம் தோன்றி அனைவரையும் கலக்கியது. தேவர்கள் சிவபெருமானிடம் ஓடி விஷத்தின் கொடுமையிலிருந்து தங்களைக் காக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். சிவன் விஷத்தைத் தொண்டையில் தாங்கிக்கொண்டார். 67

இச்செய்தியை,

" வானோ ரமுதுண்ண எல்விட நீ முன்னுண்ட தேனோ " 68

" நஞ்சம துண்டானும் " 69

" நஞ்சுண்ட தனியனார் " 70

என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். உயிர்களைக் காக்க விரும்பும் பேரிரக்கப்பண்பும் பிறர்க்கு இயலாத செயல் புரிந்த தனி ஆற்றலும் இப்பகுதியால் விளக்கப்படுகின்றன.

அடிக்குறிப்புகள் :

39. த. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, (கு. ஆ.) **திரு.ம.கலம்.,** ப. 5, குறிப்புரை.
40. **திரு. ம. கலம் ,** பா. 53.
41. மேற்படி., பா. 4
42 மேற்படி., பா. 50.
43. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, (கு ஆ.) **திரு. ம. கலம் ,** பா 50, குறிப்புரை
44 பொன். சுப்பிரமணியபிள்ளை, **சைவ சமய விளக்க வினா விடை,** பா. 29,
45. **திரு. ம. கலம்** பா. 1.
46. ஆ சிங்காரவேலு முதலியார், **'கபாலம்', அபிதான சிந்தாமணி,** ப. 659.
47. **திரு.ம.கலம் ,** பா. 76.
48. **திரு.ம.கலம் ,** பா. 4.
49. மேற்படி., பா 30.
50. மேற்படி., பா. 59.
51. மேற்படி., பா. 67.
52. மேற்படி., பா. 87.
53. கோ. சுந்தரமூர்த்தி, **சைவசமயம்,** ப. 45.
54. மேற்படி., ப. 48.
55. மேற்படி , ப. 55.
56. **திரு.ம.கலம் ,** பா. 1.
57. மேற்படி., ப. 87.
58. மேற்படி., பா. 68.
59. மேற்படி., பா. 1.
60. ஆ. சிங்காரவேலு முதலியார், **அபிதான சிந்தாமணி,** ப. 22.
61. **திரு. ம. கலம் ,** பா. 1.
62. மேற்படி., பா. 4.
63. மேற்படி., பா. 87.
64. கோ. சுந்தரமூர்த்தி, **சைவ சமயம்,** ப. 52.
65. **திரு. ம. கலம்.,** பா. 68
66. மேற்படி., பா 95.
67. கோ. சுந்தரமூர்த்தி, **சைவ சமயம்,** ப 56.
68. **திரு. ம. கலம் ,** பா 58.
69 மேற்படி., பா. 63.
70. மேற்படி., பா. 96.

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	6 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர்—நாவலர் ந. மு, வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4 00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	ரூ.	40 00
சொல்லதிகாரம்	ரூ.	45 00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ.	7 50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4 50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு நூலகர்,

அரசினர் கீழ்த்திசைச் அவர்கள்

சுவடிகள் நூலகம்,

சென்னை,

600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி, ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி, தஞ்சாவூர் - 613 009.